என்று தணியும் எங்கள் சுதந்திர தாகம்

March 2014

FREE ISSUE

# லண்டன் தமிழர் தகவல்


## London Tamil's Information

**பழநி பங்குனி உத்திர தேரோட்டம் ஏப்ரல் 13**



மாதாந்திர செய்திச் சஞ்சிகை

A monthly information digest




தரமான தங்கத்துக்கு லண்டனில் நாடவேண்டிய ஒரே இடம்

லட்சுமி ஜுவலர்ஸ்

276 High Street North London E12 6SA UK

Tel : 020 8470 5600 Fax : 020 8470 3448

எங்களுக்கு வேறெங்கும் கிளைகள் இல்லை


Niru BRAND
Bringing Great Food to Life.
The No 1 Brand
Niru BRAND
Quality you can taste
Niru Europe Ltd,Unit11,Mitcham Industrial Estate, 85 Streatham Road,Mitcham,Surrey CR42AP.
T: 020 8640 8228 F: 020 8640 8423 E:sales@niru.co.uk W: www.niru.co.uk



# தமிழர் தகவல்
## Tamil Information

பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல் - குறள்


திருவள்ளுவர் ஆண்டு 2045

நந்தன - பங்குனி

மலர் : 11

இதழ் : 129

மார்ச் - 2014



முகவரி :
41, HADDINGTON ROAD
BROMLEY
KENT BR1 5RG, U.K.
Email : jothy5@yahoo.co.uk



வெளியீடு :
திருமுருகன் அறிவகம்
லண்டன்
Thirumurugan Arivagam
London

கணக்கு எண் : 29513668
வங்கி இலக்கம் : 77 91 29
வங்கி : Lloyds TSB

ஆசிரியர் : அரவிந்தன்
Editor : Aravindan

வடிவமைப்பு :
தமிழ்அலை
Layout :
Tamil Alai, tamilalai@gmail.com



படைப்புகள் யாவும்
ஆக்கியோரின் உரிமைகளே




4000 பிரதிகள்


தமிழர்களே! தமிழர்களுடன்
தமிழில் பேசுங்கள்!!


## விளம்பர உண்மை...


தமிழர் தகவல் இதழில் வெளிவரும் விளம்பரங்கள் அனைத்தும் தரமானவை. உண்மையானவை என்பதை உறுதி செய்கிறோம்

தவறானவற்றை தமிழர் தகவல் வெளியிடாது



தங்கம் என்று நினைத்ததும்
நினைவுக்கு வர வேண்டிய பெயர்
Tharani Jewellery
54 Ealing Road, Wembley
Middlesex HA0 4TQ
Tel : 020 8902 7111, 8902 6777


வாசகர்களே! எமது விளம்பரதாரர்களை மனமுவந்து ஆதரியுங்கள்!


Salangai Natham
Presents
Bharathanatya Recitals
STUDENTS OF SMT MALATHY JEYANAYAGAN
ON
06-04-2014
BROADWAY THEATRE
CATFORD, LONDON
SE6 6RU
DOORS OPEN ~ 4:30 PM
PROGRAMME STARTS ~ 5:00 PM
Ticket :
£10.00
Further Details
Smt Malathy Jeyanayagan: 0208 318 5818
Minolini Raveendran : 07803 308 172
Salangainatham


லண்டனில் அதிக
காய்கறி வகைகளை
இறக்குமதி செய்து
விற்பனை செய்பவர்கள்
லண்டனில் முதல்தர காய்கறி இறக்குமதி
மொத்த விற்பனையாளர்கள்
Vaani Foods
தொலைபேசி இலக்கம் 0208 668 7648


Hotel Westeern
Hotel Westeern (Pvt) Ltd
35, Frankfurt Place
Bambalapitiya
Colombo 4, Sri Lanka
Email : infor@hotelwesteern .com
Web : www.hotelwesteern.com
Approved by the Ceylon Tourist Board
EELAM SHOP
399 Lewisham High Street
Lewisham
London SE13 6NZ
TeL : 020 8690 6545


Chennai Spice
Restaurant and Banqueting
Restaurant and Banqueting is open
7 days a week
Chennai Spice offers
authentic Srilankan &
South Indian cuisine
Free
Home Delivery
Chennai Spice Restaurant and Banqueting
213-217 Hertford Road, London, N9 7ER
Tel : 020 8805 9944, 020 8805 8215, Mob : 07932 059 553
email : info@chennaispice.com


நாணயமான நாணய
மாற்று நிறுவனம்
TRUST MONEY EXCHANGE
14 LOAMPIT HILL
LEWISHAM LONDON
LONDON SE13 7SW
United Kingdom
Tel : 0208 6946653
Mobile : 07800773330


செல்வராஜா
கோல்டு ஹவுஸ் & டெக்ஸ்டைல்ஸ்
எங்களிடம் தாலிக்கொடி
வாங்குவோருக்கு
பட்டுப்புடவை விலையில்
50% விலை கழிவு
நகைகள் அனைத்திற்கும்
50% விலைக்கழிவில்
Exclusive Designer Jewellery
Sarees & all other Dresses
Selvaraja Gold House & Textile
162, Mitcham Road London SW17 9NJ
Tel : 020 8767 3795 | 07825 005 269


Ilford பகுதியில் புதிய பல்பொருள் அங்காடி
SRI STORE
இது காலமும் SRI FOOD & WINE
என்ற பெயரில் இயங்கிய எமது கடை
புதிய பெயரில் தொடர்ந்து தங்கள் சேவைக்காக
396-400 Ilford Lane Town Centre Ilford, IG1 2NB
Tel : 020 8553 7737


மீண்டும்
புதுபொலிவுடன்
MITHUS
MITHUS
Jewellers
322-324 London Road
Croydon CR0 2TJ
Tel : 020 8683 1756
Fax : 020 8683 1792


DOSA
LOUNGE
A Taste of Pure Spice Heaven
SRI LANKAN & SOUTH INDIAN
RESTAURANT AND TAKE AWAY
ALL VEGETARIAN FOODS ARE COOKED SEPARATELY IN OUR VEGETARIAN KITCHEN AND SERVED ON SEPARATE PLATES
PARTY/ FUNCTION HALL
AVAILABLE FOR HIRE.
SMALL HALL UP TO 35 SEATS,
BIG HALL UP TO 120 SEATS
FREE DELIVERY (6PM TO 10PM) WITHIN 3 MILES RADIUS. MINIMUM ORDER OF £20.00
OUTDOOR CATERING FOR PARTIES, FUNCTIONS ETC AVAILABLE
OPENING TIMES
MONDAY – SUNDAY
11AM – 11PM
Tel: 020 8684 6661
5-7 St.James's Road, West Croydon, CR0 2SB
www.dosalounge.co.uk




Book typing and layout
*(English and Tamil)*
Book & Wrapper Design
Brochure Design
and Printing
Contact
ambika.siva5@gmail.com

அழைப்பிதழ்கள், நூல்கள், இதழ்கள்
வடிவமைக்க...
சிறந்த முறையில்
அச்சிட.....
தொடர்பு கொள்ளுங்கள்
ambika.siva5@gmail.com


# ஆன்மீக யாத்திரை

ஆன்மீக சுற்றுலா
ஆறு பகல், ஐந்து இரவு
காசி, திரிவேணி சங்கமம், அயோத்யா, கயா
கட்டணம் ஒரு நபர்க்கு £ 950
தங்கும் இடம், உணவு,
Airport pickup and drop, Local transport உட்பட

## பாரத்வாஜ் டூர்ஸ் & டிராவல்ஸ்

B 5/270 ஹனுமான் காட்
வாரணாசி - 221 001
Tel : (0542) 227 6932
Mob : 095546 66612 / 094530 02020
Email : kasimani24@gmail.com

லண்டன் தொடர்புகளுக்கு தமிழர் தகவல்





# தலைமைத்துவ இயல்புகள் கொண்ட என் மாணவன்

ஒரு வேலி மாத்திரம் அவர்கள் இல்லத்தையும் பாடசாலையையும் பிரிக்கிறது ஆனால் அவர்கள் உள்ளத்தைப் பாடசாலையிலிருந்து பிரிப்பதற்கு எந்த வேலியுமே இருந்ததில்லை. அவர்களுக்கும் பாடசாலைக்கும் ஒரு பொதுவான கிணறு. அந்த நீரினையே இரு சாரரும் உட்கொண்டமையால் தானோ அக்குடும்பத்தினருக்குப் பாடசாலையிலும் அதன் ஏனைய இயங்கு கூறுகளிலும் இத்தனை பாசத்தையும் பற்றினையும் பொழிய வைத்தது. சபேசன் இந்தக் குடும்பத்தில் உதித்தவன். தாயின் பாலூட்டலின் போதே, பாடசாலையில் பல்வேறு சந்தர்ப்பங்களில் எழுப்பப் படும் பல்வேறுவகை ஓசை ஒலிகளைக் காற்று அவன் காதுகளில் கொண்டு சேர்க்க பாடசாலை பற்றிய உணர்வு அவன் குருதியூற்றில் கலந்து விட்டது. நிரங்தரமாய் நின்று விட்டது. ஆகவே பாடசாலை மேல் அவனுக்குள்ள விசுவாசம், மோகம் பற்றிச் சொல்லித் தான் தெரிய வேண்டும் என்பதில்லை.

பெற்றோர்களே பிள்ளைகளின் முதலான,முதன்மையான ஆசிரியர்கள் என்பார்கள். "ஈன்று புறந்தருதல் என்றலைக் கடனே, சான்றோன் ஆக்குதல் தந்தையின் கடனே" என்கிறது ஒரு பழைய தமிழ் பாடல். 'புறம்' என்பது நாம் வாழ்கின்ற சமூகச் சூழல். ஒரு தாய் தனது குலக் கொழுந்தினை சமூத்தின் ஒரு கூறாகச் சிறப்புறச் செய்ற்படக்கூடிய வித்திலே தயார்ப்படுத்தியே சமூகத்திற்கு வழங்குகிறாள். அதே போன்று அக்குழந்தையின் ஆழுமையை விருத்தியுற வைத்து 'அவையத்தில் முந்தி இருக்க வைப்பது' தந்தையினுடைய முயற்சிப் பேறாகும். தொழிற் சங்கவாதியாகவும், சமூகநீதிபேணுபவராகவும் விளங்கிய தந்தையார் நாகலிங்கத்தின் அரவணைப்பிலும் , தாயாரின் விருந்தோம்பல் திறன், எவருடனும் அனுசரித்து இயம்பு நடத்தை,என சபேசனின் ஆழுமை விருத்திக்கான தளம் அமைக்கப்பட்டு பாடசாகை;கு சென்றவன் கல்வி அறிவு வளர வளர சிறந்த மாணவனாக மாத்திரமல்லாது, நற்பண்பாளனாகவும், தலைமைத்துவப் பண்பிலே உயரந்தவனாகவும் மிளிரமுடிந்தது.

20.03.2014 அன்று தனது 50வது அகவையை நிறைவு செய்துள்ள சபேசன் அவர்களுக்கு தமிழர் தகவலின் வாழ்த்துகள்

அதிபர் ஜெயரத்தினம் மாணவர் பின்பற்றக் கூடிய உதாரண புருடராக உயர்ந்து நின்றவர். சபேசனின் ஆதர்ச புருடராக அவர் நின்றது வியப்புக்குரியதல்ல. கவிஞர் கதிரேசர் பிள்ளை, விநாயகரத்தினம், அம்பலப்பிள்ளை போன்றோர் ஆரம்பித்து வைத்த தமிழ் அறிவு மேற்கொண்டு வித்துவான் சிவபாதசுந்தரம், சண்முகசுந்தரம் மயிலங்கூடலூர் நடராசன் ஆகியோரின் நெறிப் படுத்தலால் பெரு வளர்ச்சி பெற்றது. சபேசனின் இலக்கிய வாஞ்சைக்கு வித்தாயது. தோழர் வி. பொன்ப்பலத்தினோடு ஏற்பட்ட தொடர்பு அவனது சமூகப் பார்வையை, நாட்டுப் பற்றுணர்வை மிக விசாலிக்க வைத்தது.

சபேசன் வளர்ந்தான். சகல திறனும் மிளர்ந்த ஒரு மாணவனாக உயர்ந்தான். மாணவர்கள் வழிகாட்டியாகக் கொள்ளக் கூடிய தலைமைத்துவ இயல்புகள் கொண்டவனாக எழுந்தான்;. சில சமயங்களிலே பாடசாலை வளர்ச்சி கருதியும், மாணவர் நலன் கருதியும் நிர்வாகத்துடன் முரண்படுகின்ற அளவினுக்கு நிமிர்ந்து நின்றான். அவனது கலை இலக்கிய ஆர்வம் சகமாணவர்கள் சிலருடன் இணைந்து சஞ்சிகை ஒன்றினை நடத்த வைத்தது. அம்பனைக் கலைப்பெருமன்றத்தின் ஆணிவேர்களில் ஒன்றகத் துலங்க வைத்தது. தான் வாசித்து இன்புறுவது மாத்திரமல்லாமல் ஏனையோரும் அதன் சுவையினை நுகரவேண்டும் என்ற பேராசை அவனிடம் அபரிமிதமாக இருந்தமையை பேராசிரியர் சுப்பிரமணிய ஐயர் அவர்கள் என்னிடம் பெரிதும் பாராட்டிப் பேசியுள்ளார்கள். தான் தெல்லிப்பழையில் வசித்த காலை வாராவாராம் சபேசன் கட்டுக்கட்டாகப் புத்தகங்கள் கொண்டு வந்து தருவான் என ஐயா அவர்கள் கூறினார்கள். இதனை நான் அனுபவ பூர்வமாகவும் உணர்ந்துள்ளேன். காலம் செய்த கோளாறு கரணமாக நான் கனடாவுக்கும் சபேசன் இங்கிலாந்திற்கும் புலம் பெயர வேண்டி வந்தது. தாயகத்திலிருந்து புகலிடம் தேடிச் சென்றோம் எனினும் தாயகத்தில் இருந்ததிலும் பார்க்க நமது உறவு பன்மடங்கு அதிகரிக்கவே செய்தது. நான் பல முறைகள் இங்கிலாந்து சென்றுள்ளேன். ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் எனது உறவினர்கள் வீடு தவிர்ந்து வேறு வீடுகளில் தங்க வேண்டுமென வந்தால் நான் தேர்வு செய்யும் வீடுகளிலே முதன்மையானது சபேசனது வீடு ஒன்றாகும்;. அந்த அளவினுக்கு விருந்தோம்பலில் அவனது மனைவி கைதேர்ந்தவராக விளங்கினார். நான் வீடேகும் பொழுது சபேசனுடைய அன்பளிப்பாக ஒரு சில புத்தகங்கள் என் கைகளில் இருக்கும். அது மாத்திரமா? இலண்டனில் இருந்து யாராயினும் எனக்குத் தெரிந்தவர்கள் ரொறன்ரோ வருவார்களாயின் அவர்கள் கட்டாயமாக சில நூல்களைக் கொண்டு வந்து தந்து சபேசன் கொடுத்தார் என்பார்கள். சபேசனிடம் நான் கண்ட இன்னொரு வீசேட குணம் இலக்கியத் திறனுடையோரை இனம் கண்டார் என்றால் அவர்களை ஊக்கப் படுத்தி மேன்மேலும் வளர உதவுவதுடன் அவர்கள் ஆக்கங்களுக்குத் தாராளமாக பண உதவி புரிதலாகும். இத்தகைய நற்பண்பினை நாம் பலரிடம் காண்பது அரிது. கவிஞர் சு. வில்வரத்தினம் அவர்களின், “உயிர்த்தெழும் காலத்திற்காக” என்ற கவிதை நூலின் பிரசுரத்திற்காக சபேசன் அளித்த நிதி உதவி பற்றி கவிஞர் நன்றி நவிந்துள்ளார். இலண்டனில் புகலிடம் பெற்றபோதிலும் அவனது இலக்கியத் தாகத்;திற்குத் தீனி போட வேண்டும் என்ற ஆவல் “பனிமலர்” என்ற அற்புதமான சஞ் சிகையை பிரசுரிக்க வைத்தது. நல்ல தரமான சஞ்சிகை எனப் பல்லோரது பாராட்டினை அது பெற்றது உண்மை ஆனால் தொடர்ந்து நடத்துதற்குரிய பெருளாதாரத்தினை அது ஈட்டித் தரவில்லை என்பது பேருண்மை. தொடர்ந்து நஷ்டப் படுதல் என்பது சாத்தியமற்றது. ஆகவே சஞ்சிகைப் பிரசுரம் தற்காலிகமாக நிறுத்தப் பட்டது என்றே கூறுவேன். அவனது உள்ளத்ஜீல் முடங்கிக்கிடக்கும் சஞ்சுஜீகை உணர்வு ஆர்த்து எழும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. எப்போ என்பதே கேள்வி. அவனது இலக்கிய திறனை அவனது மகளில் கண்டுள்ளேன்.

அவர்கள் குடும்பம் சிறப்புற வாழ என் வாழ்த்துகள். ஐம்பது ஆண்டுகள் காணும் என் அன்பிற்குரிய சபேசன் இன்று போல் என்றும் நிறைவான வாழ்க்கை மேற்கொள்ள வாழ்த்துகிறேன்.

## பொ. கனகசபாபதி

பொன்னையா கனகசபாபதி இன்றும் மகாஜனாவின் அதிபராக அறியப்படுபவர். கனடாவில் வதியும் இவர் தொடர்ந்து நிறையவே எழுதி வருபவர். சபேசனின் வளர்ச்சியின் ஆரம்பத்தில் தடடிக் டிகாடுத்த பெருமதிப்புக்குரிய அதிபர்.

# அய்யன் திருவள்ளுவர் தமிழ் மன்றம்

## வழங்கும்

## மாதம் இரண்டு திருக்குறள்

தாமின் புறுவது உலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்.

தமக்கு இன்பம் தருகின்ற
கல்வியறிவு உலகத்தாருக்கும்
இன்பம் தருவதைக் கண்டு,
அறிஞர்கள் மேலும் மேலும்
பலவற்றைக் கற்றிட விரும்புவார்கள்.

தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு.

தோண்டத் தோண்ட
ஊற்றுநீர் கிடைப்பது போலத்
தொடர்ந்து படிக்கப் படிக்க
அறிவு பெருகிக் கொண்டே இருக்கும்.




இந்தத் திருக்குறள் நூலை லண்டனில் பெற
தமிழர் தகவல் இதழைத் தொடர்புக்கொள்ளுங்கள்

**விலை. 2 பவுண்ட் மட்டும்**

# இதுதான் தோழர்களின் நீதியா?

இலங்கையின் மீது அமெரிக்கா கொண்டுவந்த மூன்றாவது தீர்மானத்திற்கு எதிராக இந்த முறையும், பொதுவுடைமை சித்தாந்தைப் பின்பற்றுகின்ற நாடுகளான சீனா, ரஷ்யா, வெனிசுலா, கியூபா போன்றவை வாக்களித்துள்ளன. இந்த நாடுகளின் இலங்கை ஆதரவு நிலைக்கு, அமெரிக்க எதிர்ப்பு மட்டுமே ஒரே காரணம்.

கியூபாவின் பிடல்காஸ்ட்ரோ மீதும், அவருடைய போராட்ட குணத்தின் மீதும், தமிழீழத் தேசியத் தலைவருக்கு மட்டுமன்று, விடுதலையை விரும்பும் அனைவருக்குமே மிகப்பெரிய மதிப்பும், ஈர்ப்பும் உண்டு. வல்லசான அமெரிக்காவின் காலடியில் இருக்கும் சிறிய நாடானாலும், கியூபாவின் விடுதலைப் போராட்டம், மற்ற நாடுகளின் விடுதலைப் போராட்ட அமைப்புகளுக்கு மிகப்பெரிய உந்துசக்தியாக இருந்தது என்பதை அனைவருமே அறிவோம். ஆனால் அந்தக் கியூபா கூட, கண்மூடித்தனமான அமெரிக்க எதிர்ப்பு நிலைப்பாட்டை முன்னிறுத்தி, ஈழத்தமிழர்களுக்கு எதிராக இருப்பதை என்னவென்று சொல்வது?

கியூபாவின் அடியொட்டி, ஹியூகோ சாவேஸ் வென்றெடுத்த வெனிசுலா, தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்த புரட்சியாளர் லெனின் உருவாக்கிய ரஷ்யா, துப்பாக்கி முனையில்தான் விடுதலை பிறக்கும் என்று சொன்ன மாவோவின் சீனா - இந்த நாடுகளுக்கு ஈழத்தமிழர்களின் விடுதலை வேட்கையின் நியாயம் புரியாமல் போனதன் காரணம் என்ன?

பொதுவுடைமை பேசுகின்றவர்களின் சர்வதேசியத்திற்குள் இலங்கையில் அழித்தொழிக்கப்படும் ஈழத்தமிழினம் வராதா? கியூபாவின் விடுதலைப் போராட்டம், அந்நாட்டின் உள்நாட்டுப் பிரச்சினை என்று சேகுவேரா கருதியிருந்தால், பிடல் காஸ்ட்ரோவுக்கு வலிமையான போராட்டத் துணை கிடைத்திருக்குமா? புரட்சிதான் வென்றிருக்குமா?

உலகின் எந்த மூலையில் அநீதி இழைக்கப்பட்டாலும் அதைக் கண்டு கொதித்து எழுந்தால் - நீ என் தோழனே! என்றார் சேகுவேரா. ஆனால் இன்றோ, ஒரு இனத்திற்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு ஆதரவாகவும், அரணாகவும் இருக்கின்றன பொதுவுடைமை நாடுகள். இதுதான் தோழர்களின் நீதியா? சிவப்புப் புரட்சியின் அடையாளம் என்பதெல்லாம், ஈழத்தமிழர்கள் விசயத்தில் பொய்யாகிப் போனதே, என்ன கொடுமை? செங்கொடியில் உள்ள சிவப்பு நிறம், எம்மைப் பொறுத்தவரை ஈழத்தமிழர்கள் சிந்திய ரத்தமாகத்தான் இனி தெரியும்.

[signature]

# இலங்கைக்கு எதிரான தீர்மானம்

## புறக்கணித்த காங்கிரசு, பாராட்டிய பாரதிய ஜனதா

## ஜீவசகாப்தன்

மூன்றாவது முறையாக இலங்கைக்கு எதிராக ஐ.நா. மனித உரிமை கவுன்சிலில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.கடந்த இரண்டு முறை அமெரிக்க கொண்டு வந்த தீர்மானத்தைவிட தற்போது சற்று அதிகம் அழுத்தம் கொடுக்கும் வண்ணம் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. கடந்த 2012 மற்றும் 13ஆம் ஆண்டுகளில் தமிழகத்தில் இருந்து கொடுத்த அழுத்தம் காரணமாக, இலங்கையுடன் ஒரு பேச்சு வார்த்தை நடத்தப்பட்டு இந்தியா அந்த தீர்மானத்தை ஆதரித்த்து.அந்த தீர்மானத்தில் ஈழத்தமிழர்களுக்கு எதிராக நடைபெற்ற போர்க்குற்றத்தை ராஜபக்சேவே விசாரித்து அறிக்கை தர வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. இன்னும் சொல்லப்போனால் ராஜபக்சேவிற்கு ஆதரவாக அப்படி ஒரு திருத்தத்தை கொண்டுவந்த்தில் இந்திய துணைகண்டத்திற்கு அளப்பரிய பங்கு உண்டு. ஆகவே, அந்த தீர்மானத்தை இந்தியா ஆதரித்து ஈழத்தமிழர் நலனில் அக்கறை இருப்பது போல் காட்டி கொண்டது. இந்த நாடகத்தை பகுத்தறிவுள்ள அனைவருமே அறிவர் இருந்த போதிலும், உலக அரங்கில் இலங்கையில் போர்குற்றம் நடைபெற்றது என்பதை பதிவு செய்வதற்கு வாய்ப்பாக அந்த தீர்மானம் இருந்த்து என்பதை மறுக்கமுடியாது. ஆனால், ராசபக்சேவை நீதிபதியாக்கிய அந்த அமெரிக்கத் தீர்மானங்கள் கேட்ட குறைந்த பட்ச விள்க்கத்தை கூட ராஜபக்சே அரசு அளிக்க தயாராக இல்லை. கற்றல் மற்றும் படிப்பினைகள் குழுவையே ராஜபக்சே அரசு அமைக்கத் தயாராகவில்லை. ராஜபக்சேவிடம் “மயிலே, மயிலே, இறகு போடு” என்றால் அது சாத்தியமாகுமா.



அதேசமயம், உத்தம புத்திரன் ராஜபக்சேவை குற்றவாளிக் கூண்டில் நிறுத்தியதே மிகப்பெரிய பாவம் என முழக்கமிடுகின்றன கியுபா, ரஸியா, சீனா போன்ற பொதுவுடைமை சித்தாந்த ஆதரவு நாடுகள். தங்களின் அமெரிக்க எதிர்ப்பை காட்ட ராஜபக்சே அரசை தலையில் தூக்கி வைத்து கொண்டாடுகின்றன. தமிழின அழிப்பை நடத்தி விட்டு இன்னும் இறுமாப்பில் ராஜபக்சே இருப்பதற்கு கியுபா உட்பட 12 நாடுகள் பக்க பலமாக இருக்கின்றன. இந்தியா உட்பட 12 நாடுகள் கள்ள மவுனம் சாதிப்பதும் இலங்கை அரசிற்கு நம்பிக்கையை அளிக்கிறது. சர்வதேச அளவில் இலங்கை அரசை தனிமைப்படுத்த சீனா, கியூபா, இந்தியா என அனைத்து நாடுகளும் எதிர்ப்பு தெரிவிக்கின்றன. இந்த புறச்சூழலின் புரிதலுடன்தான் ஐ.நா மனித உரிமை கவுன்சிலில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை அணுக வேண்டும், ஆராய வேண்டும்.

### இந்தியாவை கொண்டாடும் ஆங்கில ஊடகங்கள்

அமெரிக்க தீர்மானத்தை புறக்கணித்த இந்தியாவின் நிர்வாக முடிவை மலையாள முதலாளிகளின் ஆங்கிலஊடகங்கள் கொண்டாடுகின்றன. சிவசங்கர் மேனன் தலைமையில் மிகவும் ஆராய்ந்து தொலைநோக்கு பார்வை கொண்டு, எடுக்கப்பட்ட முடிவு என பாராட்டுகின்றன. இலங்கையுடன் நட்புறவை பேணும் இந்த முடிவை டைம் ஆப்ஸ் இந்தியா வெளிப்படையாக பாராட்டியுள்ளது. ஆனால், அதே சமயம்,

இந்தியாவின் புறக்கணிப்பை கண்டித்து தமிழ் அமைப்புகள் நடத்திய போராட்டத்தையும் செய்தியாக வெளியிட்டிருக்கிறது. அதில் காங்கிரஸ் ஆட்சியின் துரோகம் என்பதை முன்னிலை படுத்தியிருக்கிறது. அதாவது, இலங்கை அரசுடன் நட்பு வைத்த இந்திய அரசிற்கு பாராட்டு, அதே சமயம் தமிழர்களின் மனதை புண்படுத்திய காங்கிரசிற்கு கண்டிப்பு. இதன் உள் அர்த்தத்தை புரிந்து கொள்ள வேண்டும். காங்கிரஸ் அப்புறப்படுத்தப்பட வேண்டும். அதே சமயம் தமிழர்களுக்கு எதிரான நிலைப்பாடு பேணப்பட வேண்டும். ஆகா என்ன ஒரு அரசியல். எப்படிப்பட்ட உள்குத்து. கவனித்தீர்களா. இந்த சமார்த்தியம் தமிழர்களுக்கு துளி அளவாவது இருக்கிறதா. எங்கே நம் தமிழ்தேசிய தோழர்களுக்கு திராவிடத்தை பழிக்கவே நேரம் சரியாக இருக்கிறது.

### அமெரிக்காவை விமர்சித்த சுப்ரமணியசுவாமி

அமெரிக்காவிடம் அறத்தை எதிர்பார்க்காலாமா? போர்க்குற்றத்தை பற்றி அமெரிக்காவிற்கு பேச என்ன தகுதி இருக்கிறது? என்று சில சர்வதேச சிந்தனையாளர்கள் நம்மிடம் கேட்கிறார்கள். அந்த கேள்வி நம் ஆழ்மனதிலும் எழுகிறது. நாமும் அமெரிக்க எதிர்ப்பு கருத்தியலோடு வளர்க்கப்பட்டவர்கள்தான். ஆனால், தமிழர் தரப்பு நியாயத்தை ஐ.நா அவையில் கொண்டு செல்வதற்கு, அமெரிக்க தீர்மானம் மட்டுமே தற்போது பாதையாக இருக்கிறது என்பதை நம்மவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். பாட்டாளி வர்க்க அரசியல் பேசும் நாடுகள் என்று நாம் இதுவரை நம்பிய நாடுகள் ராஜபக்சே நல்லவர் என்கிற வெகுமதியை வழங்குகின்றன. சர்வதேச அளவில் பாட்டாளிகளுக்கான அகிலம் சாத்தியம் என்று சொன்னவர்கள், இனவெறியுடனுடன் சிங்கள அரசு பயங்கரவாதத்திற்கு காவடி தூக்கும்போது, அமெரிக்கத் தீர்மானத்தை ஆதரிப்பதை தவிர, நமக்கு வேறு வழி இல்லை. இன்னும் சற்று சுருக்கமாக சொல்கிறேன் கேளுங்கள். பாரதிய ஜனதாவின் முக்கிய தலைவர் சுப்ரமணியசுவாமி அமெரிக்காவை இந்த தீர்மானத்திற்காக விமர்சனம் செய்திருக்கிறார். எப்போதும் அமெரிக்காவிற்கு துதி பாடும் சுப்ரமணியசாமி, இந்த பிரச்சனைக்காக, அமெரிக்காவை கோபித்து கொள்கிறார் என்றால், நாமும் இந்த விவகாரத்திற்காக மட்டும் அமெரிக்காவை ஆதரிப்பதில் தவறில்லை. இந்த அரசியலை நமக்கு சொல்லி தந்தவர் தோழர் சேகுவாரேதான். அவரது மொழியில் சொல்ல வேண்டுமானால், நாம் என்ன ஆயுதம் எடுக்க வேண்டும் என்பதை நம் எதிரிகள்தான் தீர்மானிக்க வேண்டும்.

### தொடரும் இந்தியாவின் துரோகம்

தமிழர்களின் வரிப்பணத்தை கொண்டு தமிழர்களை அழித்தொழித்த பார்ப்பன மலையாளிகளின் சேவக அமைப்பான இந்தியா இன்னும் அந்த துரோகத்தை செய்து வருகிறது. இந்த முறை வெளிவந்த அமெரிக்க தீர்மானத்தில், இலங்கையில் நடைபெற்ற மனித உரிமை மீறல் குறித்து சுதந்திரமான விசாரணை வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டிருக்கிறது.இது இலங்கையின் இறையாண்மையை பாதிக்கிறதோ இல்லையோ இந்தியாவின் இறையாண்மையை பாதித்து விட்டது. இலங்கையில் நடைபெற்ற போர்க்குற்றங்கள் குறித்து, ஐ.நா மனித உரிமை கவுன்சில் விசாரிப்பது இந்தியாவின் மனசாட்சியை உலுக்குவதாக உள்ளது. ஏனென்றால், நியாயப்படி விசாரித்தால் இந்தியாவின் பங்கு அம்பலப்பட்டு விடுமே என்கிற பதற்றம்தான் இந்தியா வெளிநடப்பு செய்ய காரணம். கையூட்டு பெற்றுவிட்ட காவல்துறை அதிகாரியிடம் உரிமையுடன் கோபப்படும் குற்றவாளி போல் இலங்கை இந்தியாவிடம் நடந்து கொள்கிறது. இந்தியாவும் அதற்கு குழைந்து போய்க் கொண்டிருக்கிறது.

### அமெரிக்கத் தீர்மானம் தீர்வை தருமா

அமெரிக்கத் தீர்மானம் இராஜபக்சேவிற்கு பகுதி சார்பானது என்பது உணமைதான். இன்று வரை அந்த தீர்மானத்தில், இனப்படுகொலை என்கிற வார்த்தை இடம் பெறவில்லை. மேலும், அங்கு நடைபெற்றது மதச் சிறுபான்மையினர் மீது நடத்தப்பட்ட தாக்குதல் என்று உண்மைக்குப் புறம்பான தகவலையும் அமெரிக்க தீர்மானம் தந்திருக்கிறது. ஆகவே, இது நமக்கு முழு தீர்வல்ல. அடுத்த கட்ட நகர்விற்கான பாதை அவ்வளவுதான். நாம் ஒரு செய்தியை நம் மனதில் இருத்திக் கொள்ள வேண்டும்.

தமிழின பகைவர்கள் சிங்கங்களாக இருந்தால் சக்தியுடன் போராடலாம். ஆனால் சிறுநரிகளாக இருந்தால் யுக்திகள் வகுத்துதான் போராட வேண்டும். சக்தியுடன் யுக்தி கொண்ட சமூகமாக தமிழினம் பாரினில் பரவ தொடர்ந்து போராடுவோம்.

# சைவ மகா மாநாட்டின் பயன் என்ன?

-சோதி



லண்டன் வாழ் சைவ மக்களை நெறிப்படுத்துவதற்காக சைவத் திருக்கோயில் ஒன்றியம் உருவாகக்கப்பட்டது. இவ்வொன்றியம் உருவாக்கப்பட்ட போது பலரும் மிகுந்த வரவேற்புக் கொடுத்தனர். லண்டன் வாழ சைவ மக்களை ஒன்றிணைக்கும் ஒரு நிறுவனமாக இவ்வமைப்பு விளங்கப் போகின்றது எனப் பலராலும் எதிர்பார்க்கப்பட்டது. லண்டனில் உள்ள இந்து ஆலயங்கள் யாவும் ஒருமித்த செயற்திட்டங்களை உருவாக்குவதற்கும் பஞ் சாங்கங்கள், தினகக்கலண்டர் போன்றவற்றால் ஏற்படும் சமய விழா பற்றிய குழப்பங்களைச் சீர் செய்வதற்கும் இவ்வொன்றியத்தின் பிரசவத்தை பலரும் மிகுந்த ஆவலோடு வரவேற்றனர்.

ஒன்றியம் உருவாகி ஒரு சில கால மாதப்பகுதியிலேயே உலக சைவ மகாநாடு லண்டனில் நடாத்துவதென அரிவிக்கப்பட்டபோது, அதனை அறிந்து அகமகிழாத சைவர்கள் இல்லை எனலாம். இனி விடயத்திற்கு வருகிறேன். முதலாவது மகாநாடு லண்டனில் கூட்டப்பட்ட போது உலக ரீதியான சைவ மகாநாடு என்ற மகுடம் வெளிப்படுத்தப்பட்ட போதிலும் மக்கள் தொகை மகாநாட்டு மண்டபத்தில் எதிர்பார்த்தளவு இருக்கவில்லை. இரண்டாம் நாள் மக்கள் தொகை கூடுமென எதிர்பார்க்கப்பட்ட போதிலும் ஏமாற்றமே மிஞ்சியது. இலங்கை, இந்தியா, மலேசியாவில் இருந்து பேச்சாளர்கள் அழைக்கப்படிருந்தார்கள்.

ஒவ்வொரு பேச்சாலரும் தன் தன் தலைப்பிலே பேசியதை விட பேச்சுக்க்கு அழைத்தவர்களைப் பாராட்டுவதில் செலுத்திய கவனம் மிகவும் கனதியாக இருந்தது. மாநாட்டின் மதிய உணவு வேளையில் மக்கள் கூட்டம் சற்று அதிகமாக இருந்தது.

மாநாடு இரண்டு நாட்களில் இனிதே நிறைவு பெற்றது. மாநாட்டின் கருப்பொருள் பற்றியோ, மாநாட்டின் குறிக்கோள் பற்றியோ யாரும் கவலைப்படவில்லை. காரணம் மாநாடு நடத்தியவர்கள் மகா நாடுகளைச் சந்தித்த அனுபவம் இல்லாதவர்கள் என்பதை உணர்த்தியது. மாநாட்டினால் ஏற்பட்ட நன்மை என்ன என்பதை நுணுக்கமாக ஆராய்ந்தால், இந்திய ஈழத்துப் பேச்சாளர்கள் சிலர் லண்டனில் அறிமுகமாகியது என்பதை ஒத்துக்கொள்ளலாம்.

ஏனைய பயன் எதுவும் இங்கிலாந்திர்கு வந்து சேரவில்லை. முதலாவது மாநாட்டில் விட்ட தவறாஆள் உணரப்பட்டு அடுத்த ஆண்டு மாநாட்டில் வெற்றியாக்கப்படும் என எதிர்பார்க்கப்பட்ட போதும் எதுவித

பயனும் கிட்டவில்லை. குறிப்பிட்ட காலத்திற்கு ஒருமுறை பல்வேறு விடயங்களை ஆராய்ந்து அறிஞர்குழு சான்றோர் அவையில் அவாராய்வை சமர்ப்பித்தல் மகாநாட்டு மரபாகும். ஆனால் இங்கிலாந்தில் மகாநாட்டை வருடா வருடம் கோயில் திருவிழா போல் கொண்டாடத் திடங்கிவிட்டார்கள். ஆலயங்கள் பல்கிப்பெருகிய போதிலும் ஒன்றியத்தில் எல்லா ஆலயங்களும் ஒன்றிணைக்கப்படவில்லை. ஒவ்வொரு ஆண்டும் மகாநாடு என்ற பெயரில் மிகக் குறைந்த மக்கள் தொகையோடு இருநாள் விழா முற்றுப்பெறுகின்றது. மகாநாடுகள் குழு அமைப்பதில் ஒவ்வொரு ஆண்டும் ஒன்றியத்தார் இடையே கடும் போட்டி. சமயத்தை வளர்ப்பதற்காக ஏற்பட்ட போட்டியல்ல. மகாநாடு குறித்த வெளியிடப்படும் மலரில் முகம் காட்டுவதற்கான போட்டியாகும். இது போன்ற மகாநாடு விடயமாக ஏற்பட்ட போட்டிகள் மலந்ததேயொழிய மகாநாட்டின் மூலம் சைவ மக்கள் பெற்ற அறுவடை என்னவென்று கேட்டால் அதற்கு என்ன பதில் சொல்வதென்று தெரியவில்லை. இங்கிலாந்தில் பிறந்து வாழும் இளைய தலைமுறைக்கு இம்மகாநாடு பயன் தருமெனக் கருதிய போதும், அதிலும் மாநாடு தோல்வி கண்டது. உதாரணமாக மகாநாட்டை நடத்திய பிரமுகர்களின் பிள்ளைகள் கூட அந்தப்பக்கம் தலைகாட்டவில்லை.

சிறுவர்களுக்கான பேச்சுப் போட்டி, பண்ணிசைப் போட்டி தொடர்ந்து நடைபெறுகின்றது. ஆனால் பாடிய பிள்ளைகள், பேசிய பிள்ளைகள் ஆங்கிலம் மூலம் தமிழை எழுதி மனனம் செய்து ஒப்புவித்த காட்சியே தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

அதிலும் எதுவித முன்னேற்றமும் இல்லை, மகாநாட்டில் திருமுறைக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். தமிழில் பூசை செய்ய வேண்டும் என பேச்சாளர்கள் உணர்ச்சிவசமாகப் பேசிவிட்டுப் போய்விடுவர். மாநாட்டின் முடிவில், இதோ தமிழில் எல்லாமே! என்ற முடிவுரைகள் உச்சரிக்கப்பட்டது. இவையும் நடைமுறையில் பயன்பெற்றதாக இல்லை. ஒரே ஒரு கோயிலில் மட்டும் திருமுறை ஓதுவதற்கு ஓதுவார் உள்ளார். ஏனைய ஆலயங்களில் ஆறு குருக்கள் வரை இறக்குமதி செய்வதில் அக்கறை கொள்ளவில்லை. சில ஆலயங்களில் மகோற்சவ காலத்தில் பல ஆயிரம் பவுண் செலவில் நாதஸ்வர தவில் குழுவினரை அழைப்பதும் பேச்சாலரை அழைப்பதுவும் வழக்கமாகிவிட்ட போதிலும் திருமுறைக்கு, கூட்டு வழிபாட்டிற்கு எவ்வித முக்கியத்துவமும் இதுவரை கொடுக்கப்படாதமையை நாம் அனுபவிக்கின்றோம். எனவே சைவ மகாநாடு ஏற்படுத்திய சமய எழுச்சி அல்லது சமய மறுமலர்ச்சி என்ன என்று சுட்டிக்காட்ட முடியவில்லை. எனவே உலக சைவ மகாநாட்டைக் கூட்டுகின்ர லண்டன் வாழ் சைவப் பிரமுகர்களே! சற்றுச் சிந்தியுங்கள். மகாநாட்டை திட்டமிட்டுக் கூட்டுங்கள். சைவ மகாநாட்டின் கருப்பொருளை வரையறை செய்யுங்கள். சைவமகாநாடு கூட்டுவதால் இங்கிலாந்தில் வாழும் சைவ சமயத்தவர்க்கு உண்மையான பயனைத் தரக்கூடிய திட்டங்களை ஆராயுங்கள். நடைமுறைக்குச் சாத்தியமில்லாத விடயங்களை மேடையில் பேசுவதால் பயனில்லை.

சைவமகாநாடு கூட்டுவதனை என்றும் யான் வரவேற்பதற்குக் காத்திருக்கின்றேன்.மகாநாட்டில் அனைத்துச் சைவ மக்களும் உண்மையில் ஒன்று திரளக்கூடியதாக, சீரிய முறையில் ஏற்பாட செய்யுங்கள். உலக மகாநாடு என்ற மகுடம், முழு உலகிலும் இங்கு எடுக்கப்படும் தீர்மானங்களை சென்றடைய வழி செய்யுங்கள். இல்லை என்றால் உலக மகாநாடு என்ற சொல்லிற்கு அர்த்தமில்லை. உலக மகாநாட்டினைக் கூட்டுகின்ர பிரமுகர்களே இங்கிலாந்திலுள்ள அனைத்துச் சைவக் கோயில்களையும் ஒன்றுபடச் செய்ய முயற்சி எடுக்கவில்லையாயின் பயனில்லை. 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு, ஒற்றுமை நீங்கின் அனைவர்க்கும் தாழ்வு' என்ற சொல்லுக்கு மதிப்புக் கொடுங்கள். அன்புக்குரிய சைவ மகாநாட்டுப் பிரமுகர்களே உங்களுக்கு தயவான கருத்துக்களை யான் சமர்ப்பித்திருக்கின்றேன். உண்மையில் சைவத்தைக் காப்பதற்கு நீங்கள் முன்வர வேண்டுமானால் சைவ மகாநாட்டைப் பரந்தளவில் திட்டமிட்டு இங்கிலாந்திலுள்ள அனைத்து சைவ அமைப்புகளையும் ஒன்றுபடுத்தி நிதானமான நேர்த்தியான சைவ மகாநாட்டை நடத்த முன் வாருங்கள்.


அர்த்தமில்லாத விழாக்கள் யாவும் அவப்பொழுதாகிப் போய்விடும். எனவே பொருட் செலவில், காலச் செலவில் அக்கறை செலுத்த வேண்டிய நாட்டில் வாழும் நாம், சீரிய முறையில் திட்டமிட்டு நல்ல பயன் காண்போமாக.

---

**மே 2004 ஆம் தமிழர் தகவல் இதழில் வெளியான கட்டுரையை அப்படியே இவ்விதழில் மீள்பிரசுரம் செய்கிறோம்... அதன் தேவை கருதி!**

# ரத்த வெள்ளத்தில் சூர்ப்பனகை

## சுப.வீ



அண்மையில் விருதுநகர் மகளிர் அரிமா சங்க மாநாட்டில், கலந்து கொண்டு பேசினேன். பெண் விடுதலை குறித்து ஆற்றிய நீண்ட உரையின் ஒரு பகுதி, கம்பராமாயணத்தில் சூர்ப்பனகைக்கு நேர்ந்த அவலம் குறித்தது. கூட்டம் முடிந்தவுடன் பெண்கள் பலர் நேரில் வந்து, தங்களின் வியப்பைத் தெரிவித்தனர். தங்களுக்கு இராமாயாணக் கதை நன்றாகவே தெரியும் என்றாலும், இன்று அறிந்துகொண்ட செய்திகள் மிகப் புதியனவாக இருந்தன என்று கூறினர். அதனை அனைவரோடும் பகிர்ந்து கொள்ள, இன்றைய தொடர் பயன்படட்டும். என் உரையில் இருந்து ஒரு பகுதி கீழே...

சூர்ப்பனகை என்றொரு பாத்திரம் வருகிறதே, அந்தப் பெண்ணுக்கு இழைக்கப்பட்ட அநீதியை எத்தனை பேர் மேடைகளில் பேசுகிறோம்? அது குறித்துச் சற்று விரிவாகவே கூறவேண்டும் என்று கருதுகிறேன். கம்பரின் காப்பியத்தில், ஆரண்ய காண்டத்திலே இடம் பெற்றுள்ள சூர்ப்பனகைப் படலம், கரன் வதைப்படலம், மாரீசன் வதைப்படலம் ஆகிய மூன்று படலங்களையும் படித்தால் பல உண்மைகள் நமக்கு விளங்கும்.

இலக்குவனால் அமைக்கப்பெற்ற பர்ணசாலையின் வெளிப்புறத்தில், இராமர் ஓய்வெடுத்துக் கொண்டிருக்கிறார். தூங்கியும், தூங்காமலும் அரிதுயில் கொண்டுள்ளதாக அதனைக் கூறுவர். அப்போது தன் கணவன் வித்யுத்சிகுவனைப் போரில் இழந்து, கைம்பெண்ணாய்க் காட்டில் அலைந்து கொண்டிருக்கும் சூர்ப்பனகை அங்கு வருகிறாள். இராமரைக் கண்டு, அவர் அழகில் மயங்குகிறாள். தன்னுடைய அரக்க உருவத்தை, மந்திரத்தால் அழகிய உருவாக மாற்றிக் கொண்டு, இராமரை நெருங்குகிறாள். அவள் எப்படி நடந்து வந்தாள் என்பதைக் கம்பரின் கவிநயம் அழகுபடக் கூறும்.

"பஞ்சியொளிர் விஞ்சுகுளிர் பல்லவ மனுங்கச்
செஞ்செவிய கஞ்சநிமிர் சீறடிய ளாகி
அஞ்சொலிள மஞ்ஞையென அன்னமென மின்னும்
வஞ்சியென நஞ்சமென வஞ்சமகள் வந்தாள்"

என்னும் கவிதையை எத்தனையோ மேடைகளில் நாம் கேட்டிருக்கிறோம்.

அத்தனை அழகுடன் நடந்துவந்த சூர்ப்பனகையைக் கண்டு, இராமரும் வியந்தார். மூவுலகிலும் இல்லாத அழகாக உள்ளதே என்று எண்ணினார்.

"ஏதுபதி ஏதுபெயர் யாவர் உறவு" என்று கேட்டார். சூர்ப்பனகை சொன்னாள். தான் அந்தணர் வழிவந்தவள் என்று புனைந்து கூறினாள். 'வந்த நோக்கமென்ன?' என்று இராமர் கேட்க, ஒளிவுமறைவின்றி உண்மையைக் கூறினாள் சூர்ப்பனகை. ' உன் அழகு கண்டு மயங்கினேன். உன்னை மணந்து கொள்ள

விரும்புகிறேன்' என்றாள்.

உத்தமர் இராமர் என்ன சொல்லியிருக்க வேண்டும்? 'வருந்தாதே பெண்ணே, எனக்கு ஏற்கனவே திருமணமாகிவிட்டது. என் மனைவி சீதை பர்ணசாலையின் உள்ளே இருக்கிறாள்' என்றல்லவா உண்மை உரைத்திருக்க வேண்டும்?

அப்படிச் சொல்லவில்லை இராமர். காட்டில் வாழ்ந்த அவருக்குப் பொழுதுபோகவில்லையாம். இந்தப் பெண்ணுடன் சற்று நேரம் விளையாட்டாய் உரையாடலாம் என்று தோன்றியதாம்.

'சுந்தரி' என்றழைத்தார் இராமர். தன்னை அழகி என்று அழைத்தவுடன், அகம் மகிழ்ந்த சூர்ப்பனகை, அவர் தன்னைக் கண்டிப்பாய் மணம் புரிவார் என்று நம்பினாள். ஆனால், 'நாம் மணம் புரிந்து கொள்ளத் தடை ஒன்று உள்ளதே' என்ற இராமர், அதனை விளக்கினார். "அந்தணர் பாவைநீ, யான்அரசரில் வந்தேன்" என்பதுதான் அவர் கூறிய தடை. இருவரும் வேறுவேறு வருணத்தைச் சேர்ந்தவர்கள் ஆயிற்றே, எப்படி மணம் புரிந்து கொள்ள முடியும் என்று வருந்தினார். உடனே சூர்ப்பனகை, 'அதற்காக நீ வருந்த வேண்டாம். என் தாய் தாரணி, புரந்த சால கடங்கடர் என்னும் அரசர் மரபில் வந்தவள் தான்' என்று சமாதானம் சொன்னாள். 'அப்படியானால், உன் அண்ணன்மார் உன்னைத் தருவரேல்', அதாவது கன்னிகாதானம் செய்வரேல் மணம் செய்து கொள்ளலாம் என்றார் இராமர்.

'அதுவரை நாம் காத்திருக்க வேண்டியதில்லை. கந்தர்வ மணம் புரிந்து கொள்ளலாம்' என்ற வடமொழி மரபைச் சூர்ப்பனகை முன்வைத்தாள்.



திருமணத்திற்கு முன் உடலுறவா என்று அதிர்ச்சி அடைய வேண்டாம். பழந்தமிழ் இலக்கியங்களிலும், களவொழுக்கத்தில், அதாவது திருமணத்திற்கு முந்திய காலத்தில், மெய்யுறு புணர்ச்சி என்று உடல் உறவுச் செய்தி கூறப்பட்டுள்ளது.

"கொடுப்போர் இன்றியும் கரணம் உண்டே

புணர்ந்துடன் போகிய காலை"

என்கிறது தொல்காப்பியம். கரணம் என்றால் திருமணம். புணர்ந்து என்றால், உடல் உறவு கொண்டு என்று பொருள். எனவே இதனைத் தான், கந்தர்வ மணம் செய்து கொள்ளலாம் என்கிறாள் சூர்ப்பனகை.

இராமர் சூர்ப்பனகையைக் கிண்டல் செய்கிறார். ஆனால், அதனை அந்தப் பெண் உணரவில்லையாம். 'இந்த இப்பிறவியில் இருமாதரைச் சிந்தையாலும் தொடாத' இராமர், சூர்ப்பனகையைப் பார்த்து, 'அடடா, இது என் தவப்பயன்' என்கிறார். இதனை வெறும் கேலிப்பேச்சு என்று உணர்ந்து கொள்ள முடியாத சூர்ப்பனகை, இராமரை நெருங்கி வரும் நேரத்தில், பர்ணசாலையின் உள்ளிருந்து, சீதை வெளியே வருகிறாள்.

இருவரும் ஒருவரைப் பார்த்து மற்றவர் திகைக்கிறார்கள். யார் இவள் என்னும் கேள்வி இருவரிடமும் எழுகிறது. 'இந்த அரக்கியை இங்கிருந்து விலக்கிவிடு' என்கிறாள் சூர்ப்பனகை. இப்போதுதான் இராமர் சினம் கொண்டு, 'நீ இந்த இடத்தை விட்டு அகன்று போ' என்று சொல்லிவிட்டுச் சீதையுடன், பர்ணசாலைக்குள் சென்றுவிடுகிறார்.

சீதை வெளியில் வரும்வரை, சிரித்துச் சிரித்துப் பேசிக்கொண்டிருந்த இராமர், இப்போது ஏன், சினம் கொள்கிறார் என்று சூர்ப்பனகைக்குப் புரியவில்லை. இரவு முழுவதும் அழுது தீர்த்தபின், அடுத்தநாள் மீண்டும் பர்ணசாலைக்கு வருகிறாள். அங்கே உலவிக் கொண்டிருந்த சீதையைக் கண்டு, அவளை நெருங்குகிறாள்.

இதுவரை என்ன நடந்தது என்னும் முன்கதைச் சுருக்கம் எதுவும் அறியாத இலக்குவன், யாரோ ஒரு பெண் சீதையை நெருங்குவதைக் கண்டதும், அதிர்ச்சி அடைகிறான். நீ யார், ஏன் இங்கு வந்தாய் என்று எதுவுமே கேட்காமல், அந்தப் பெண்ணைப் பிடித்து அடிக்கிறான். அங்கே என்ன நடந்தது என்பதைக் கம்பரின் வரிகளிலேயே எடுத்துச் சொல்கிறேன் கேளுங்கள்

**"சில்அல் ஓதியைச் செய்கையின் திருகுறப்பற்றி**

**ஒல்வயிற் றுதைத்து..."**

என்கிறார் கம்பர். ஓதி என்றால் கூந்தல். சிலவாக அல்லாத நீண்ட கூந்தலைத் திருகிப்பற்றிச் சூர்ப்பனகையின் வயிற்றில் ஓங்கி உதைத்தான் இலக்குவன் என்கிறது பாடல். அத்தோடு நிற்கவில்லை, இன்னும் ஒருபடி மேலே போய் என்ன செய்தான் என்பதை,

**"மூக்கும் காதும்வெம் முரண்முலைக் கண்களும்**

**முறையால் போக்கி..."** என்று சொல்லிச் செல்கிறார் கம்பர்.

சூர்ப்பனகையின் மூக்கை அறுத்துவிட்டதாக மட்டும்தான் பொதுவாகச் சொல்வார்கள். ஆனால், அந்தப் பெண்ணின் மூக்கு, காதுகள், மார்புக் காம்புகள் எல்லாவற்றையும் இலக்குவன் வாளால் சிதைத்தான் என்பதுதான் இராமாயணக் கதை. இதோ, எதிரில் பரமக்குடிக் கம்பர் கழகத்தின் நண்பர் இராமமூர்த்தி அமர்ந்திருக்கிறார். நான் பொய் சொல்லிவிட்டுப் போய்விட முடியாது. நீங்களும் கம்பராமாயணத்தை எடுத்துப் படித்துவிட்டு நான் சொல்வதெல்லாம் உண்மைதானா என்பதை உறுதி செய்து கொள்ளுங்கள்.

இத்தனை கொடுமைகள் அந்தப் பெண்ணுக்கு ஏன் இழைக்கப்பட்டன? ஆசைகாட்டிப் பேசிய இராமருக்கு என்ன தண்டனை?

இரத்தச் சேறாகிறது அந்த இடம். இரத்தம் கொட்டக் கொட்ட இராமரைச் சந்தித்து, இது என்ன நியாயம் என்று கேட்கிறாள் சூர்ப்பனகை. 'நான் உன் மீது அன்பு வைத்ததைத் தவிர, வேறு என்ன பிழை செய்தேன்' என்று கேட்கிறாள்.

"அந்தோஉன் திருமேனிக்கு அன்பிழைத்த வன்பிழையால்..." இப்படிக் காயப்படுத்தப்பட்டு விட்டேனே என்று கதறுகிறாள். அன்பு இழைப்பது வன்பிழையாகுமா என்று அவள் கேட்ட கேள்விக்கு இராமர் எந்த விடையும் சொல்லவில்லை. 'அரக்கிப் பெண்ணே, நீ இந்த இடத்தை விட்டு உடனே போய்விடு' என்னும் கட்டளையோடு, இராமரின் நியாயம் முடிந்து போகிறது.

அதற்குப் பின்னர்தான், தன் அண்ணன் இராவணனிடம் ஓடுகிறாள் சூர்ப்பனகை. இரத்த வெள்ளத்தில் வந்து நிற்கும் தன் தங்கையைக் கண்டு, கடும் சினமுற்றாலும், இராவணன் கேட்ட முதல் கேள்வி என்ன தெரியுமா? "நீயிடை இழைத்த குற்றம் என்னைகொல்" என்பதுதான். இப்படி உன்னைக் காயப்படுத்தும் அளவிற்கு நீ என்ன குற்றம் செய்தாய் என்று கேட்கும், இராவணனை, மாரீசன் வதைப்படலம், 66ஆவது பாடலில் நீங்கள் காணலாம்.

பாருங்கள், இப்படி நியாயமாக நடந்துகொண்ட இராவணன் வில்லன், கேள்விகள் ஏதுமின்றி, ஒரு பெண்ணைச் சிதைத்த இலக்குவன் கதாநாயகன். இராமரோ கடவுள் அவதாரம்.

## சைவ முன்னேற்றச் சங்கம் (UK)



# கலசம் 75ஆவது சிறப்பிதழ்
# கட்டுரைப் போட்டி



எமது சங்கத்தின் காலாண்டிதழ் வெளியீடான கலசம் சஞ்சிகையின் 75ஆவது இதழ் சிறப்பிதழாக வெளியாகவுள்ளது. இவ் வெளியீட்டு விழா 25.05.2014/26.05.2014 ஆகிய திகதிகளில் நடைபெறவுள்ளது. இதனை முன்னிட்டு எழுத்தாளர்களை ஊக்குவித்து, அவர்களின் படைப்புகளுக்கு சிறப்பிடம் கொடுக்கும் நோக்கில் இக்கட்டுரைப் போட்டி இடம்பெறுகிறது.

**போட்டிக்கு பின்வரும் தலைப்புக்களில் ஒன்றைத் தெரிவு செய்யவும்**

**ஆரம்பப்பிரிவு: 10 வயதிற்குட்பட்டோர்**

தலைப்புகள்:
நான் வணங்கும் கடவுள்
நான் பார்த்த தேர்த் திருவிழா
என் பெற்றோர் சொல்லித்தரும் கடவுள்

(90 – 110 சொற்கள்)

**மத்தியபிரிவு: 10-15 வயதிற்குட்பட்டோர்**

தலைப்புகள்:
நாயன்மார்களின் இறை நம்பிக்கை
நல் ஒழுக்கத்தின் அவசியம்
என் பார்வையில் எனது சமயம்
என் வீட்டில் சமய வாழ்க்கை

(150-200 சொற்கள்)

**மேற்பிரிவு: 15-21 வயதிற்குட்பட்டோர்**

தலைப்புகள்:
சமய வாழ்க்கையும் எனது எதிர் காலமும்.
சைவ சமயத்தின் உண்மைகள்
சைவம் செல்லித்தரும் அற நெறி
நான் சுவைத்த திருமுறை

(300-350 சொற்கள்)

**21 வயதிற்கு மேற்பட்டோர்**

தலைப்புகள்:
பெரியபுராணப் பண்பாடும் வாழ்க்கை நெறியும்
சைவ ஆலயங்களில் சமுதாய நலக் கொள்கைகள்
திருமுறையில் தமிழின்பம்
சைவ இலக்கியத்தில் மனித நேயம்
என்னை ஏன் இறைவன் படைத்தான்?
நால்வர் காட்டும் சைவ சித்தாந்தம்

(1000- 1500 சொற்கள்)

போட்டியில் முதலாம் இடம் பெறும் கட்டுரைகள் கலசத்தின் 75வது சிறப்பிதழில் பிரசுரிக்கப்படும். ஏனையவை எதிர்காலத்தில் கலசத்தில் வெளியாகும் வாய்ப்புள்ளது.

போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு ஒவ்வொரு பிரிவிலும் முதலாம் பரிசாகத் தங்கப் பதக்கமும் இரண்டாம், மூன்றாம் இடங்களுக்கு சிறப்புப் பரிசுகளும் வழங்கப்படும்.

நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.

கட்டுரைகள் **29-04-2014ம்** திகதிக்கு முன் எமக்குக் கிடைக்க வேண்டும்.

**முகவரி: Saiva Munnetta Sangam (UK) - KALASAM**
2 Salisbury Road, Manor Par, London E12 6AB
00(44) 208 514 4732Registered Charity No. 292085
Website: www.saivamunnettasangam.com
e-mail: smsukinfo@gmail.com
other contact Nos:02085544826 or 07857 292550

# கற்பகத்தருவான பனை

நுணாவிலூர்
கா.விசயரத்தினம்



## பனை பற்றி இலக்கியங்கள்

பனை பற்றித் தமிழ் இலக்கியங்கள் பலவாறாகப் பேசும் பாங்கினையும் காண்போம். 'புல்லும் மரனும் ஓரறிவினவே, பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே' (பொருள் 572) என்று தொல்காப்பியமும், 'நுங்கு' 'பாளை' (293), 'பனை' (372) என்று குறுந்தொகையும், 'தீங்கண் நுங்கின்' 'பெண்ணை' (பனை) ௫ (392) என்று நற்றிணையும், 'கள்ளொடு காமம் கலந்து' (வையை 10 69) என்று பரிபாடலும், 'உண்மின் கள்ளே!' (இரண்டாம் பத்து18) என்று பதிற்றுப்பத்தும், 'இரும்பனை வெண்தோடு மலைந்தோன்' (பனம்பூச் சூடிய சேரன்) (புறம் 45), 'பனைக் கொடியோன்' (பரசுராமன்) (புறம் 58) என்று புறநானூறும், 'இளங்கண் கமழும்'(அகம் 113), 'பெண்ணை (பனை) ஓங்கிய' (அகம் 120), 'பனைத் திரள்' (அகம் 148), 'இரும்பனை இதக்கை' (நுங்கின் தோடு – பணிவில்) (அகம் 365) என்று அகநானூறும், 'மடல் அம் பெண்ணை' (114) என்று ஐங்குறுநூறும், 'பனைக் கொடி' (முல்லைக்கலி 47), 'கடுங்கள்ளை' (முல்லைக்கலி 151), 'போழில் (பனை ஓலை) புனைந்த வரிப்புட்டில்' (முல்லைக்கலி 178)

என்று கலித்தொகையும், 'கள்ளுண்ணாமை' (அதிகாரம் 93 குறள்கள் 10) என்று திருக்குறளும், 'பனைப்பதித்து உண்ணார் பழம்' (பழமொழி நானூறு 187), 'பனை முதிரின் தாய்தாள்மேல் வீழ்ந்து விடும்' (பழமொழி நானூறு 270), 'குறைப்பர் தம் மேலே வீழப் பனை' (பழமொழி நானூறு 280), 'கள்ளுண்போன் சோர் வின்மை பொய்' (முதுமொழிக் காஞ்சி 73) என்று பதினெண் கீழ்க்கணக்கு நூல்களும் பனை பற்றிப் பற்பல செய்திகளைக் கூறுகின்றன.

## பனையின் சிறப்பு

பனை தொடர்ந்து அளித்துவரும் பயன்களை முன்னிலைப்படுத்தி மக்கள் பனை மரத்தைத் தங்கள் தேசிய மரமாகவும்,; சின்னமாகவும், தேசியக் கொடியாகவும் பாவித்துப் பனையின் சிறப்பினை உலகறிய வைத்துள்ளனர். இது தொடர்பில் பின்வருவன ஒரு சில உதாரணங்களாகும்.

• கம்போடியாவின் தேசிய மரவடைச் சின்னமாகப் பனை மரத்தை அங்கீகரித்துள்ளனர்.

• கிருஷ்ண பகவானின் மூத்த சகோதரனான பலராமனின் இரதத்தில் பனைமரம் பொறித்த கொடி பறந்த வண்ணம் உள்ளது. இதனால் பலராமனைப் 'பனைக் கொடியோன்' என்றழைப்பர்.

• வடமாகாண சபையின் தேசியக் கொடியாகப் பனை மரம் பொறித்த கொடி பறந்து கொண்டிருப்பதையும் நாம் காணலாம். இதை மக்கள் நன்றிக் கடனாகவே கருதுகின்றனர்.

• தமிழ்நாடு பனை மரத்தைப் பணித்துறைக்குரிய தேசிய மரமாகப் பிரகடனப் படுத்தியுள்ளது.

## பனை தரும் உணவுப் பொருட்கள்

மக்களுக்குப் பனை அளிக்கும் உணவுப் பொருட்களையும், அவற்றின் பெயர்களையும் ஒருங்கே நிரல் படுத்திக் காண்போம்.

**1. நுங்கு:** பெண் பனை உறையுள் பொதிந்த (பாளைஃ பூமடல்) மலர்க் கொத்துக் குலையை பனை உச்சியின் வட்டிலிருந்து தை மாதத்தில் வெளியில் தள்ளி, அதிற் பல இளங்குரும்பைகள் தோன்றும். இக் குரும்பையின் உள்ளே இருக்கும் இனிப்புச் சுவை கொண்ட வழுவழுப்பான சதைப் பகுதியை 'நுங்கு' (பனஞ்சுளை) என்று கூறுவர். நுங்கைச் சிறார்கள் விரும்பி உண்பர்.

மூன்று கண், இரு கண், ஒரு கண் கொண்ட குரும்பைகள் உள்ளன. அவற்றின் மேற்பக்கத்தை அரிந்தால் இக் கண்கள் துலாம்பரமாகத் தெரியும். குரும்பையை அரிந்து நுங்கைக் குடித்து விட்டுக் குரும்பையைச் சிறிதாக அரிந்து ஆடு, மாடுகளுக்கு உணவாகக் கொடுப்பர். அணில் குரும்பையுள்ள பனை மரத்தில் ஏறிக் குரும்பையைக் கோதி நுங்கைக் குடித்துவிடும். இக் குரும்பைகள் சில நாட்களில் மரத்திலிருந்து விழுந்துவிடும். இதையும் மக்கள் எடுத்துப் பாவிப்பர். குரும்பைகள் முதிர்ந்துவர அதிலுள்ள நுங்கு கெட்டியாகிச் 'சிக்காய்' ஆகிவிடும். அதன்பின் அதை உண்ணமுடியாது.

கோவில்களில் சித்திரை மாதத்தில் குரும்பைகள் கட்டிச் சோடித்துச் 'சித்திரைக்கதை' படித்து, கஞ்சி காய்ச்சி, பூசைகள் செய்து, தெய்வ வழிபாடு புரிந்து, மக்கள் ஒன்று கூடி உணவருந்தி மகிழ்ந்து செல்வர்.

**2. பனம் பழம்:** முற்றிய குரும்பைகள் பழுத்துப் பனம் பழமாய் ஆனி, ஆடி மாதங்களில் விழத் தொடங்கிவிடும். இவற்றில் மூன்று கொட்டையுள்ள பழங்களை 'முக்காழி' என்றும், இரு கொட்டையுள்ள பழங்களை 'இருகாழி' என்றும், ஒரு கொட்டையுள்ள பழங்களை 'ஒருகாழி' என்றும், முளைக்காத தரம் குறைந்த சிறு கொட்டையுள்ள பழங்களைச் 'சொத்தை' என்றும் அழைப்பர். இக் கொட்டைகள் எல்லாம் தும்பால் மூடப்பட்டுப் பழச்சதை (களி) நிறைந்துள்ளன. களி நீக்கிய சொத்தைகளை மா, தூள் அரிக்கும் அரிப்பெட்டிகளைத் துப்பரவு செய்வதற்குப் பாவிப்பர். பனம் பழத்தின் பழச் சதையைப் பச்சையாகவும், வேகவைத்தும் உண்பர். ஒரு பனம் பழம் சாப்பிட்டால் அது ஒரு நேர உணவுக்குச் சமனாகும். ஒரு பழம் நாலு *(04)* முதல் ஏழு *(07)* அங்குலம் வரையான விட்டம் கொண்டது.

நல்ல பனம் பழக்கொட்டைகளைப் பிசைந்து பழச்சதையை எடுத்துப் பந்தற் பாயிற் பரவி வெயிலிற் காயவிட்டுப் பனாட்டு என்னும் உணவுப் பொருளைச் செய்வர். அதை மக்கள் விரும்பி உண்பர். பனங்கட்டி, எள்ளு, நீர் ஆகியவற்றைப் பாத்திரத்திலிட்டு அடுப்பில் வைத்து நெருப்பில் காய்ச்சிய பாணியில் பனாட்டுத் துண்டுகளைத் தோய்த்து மண் பானையில் அடுக்கி வைத்தால் 'பாணிப் பனாட்டு' ஆகிவிடும். இதைப் பழுதுபடாமல் வைத்துச் சாப்பிடலாம்.

பனம் பழங்களை மாடுகளுக்கு உண்ணக்

கொடுப்பர். அவை அதிலுள்ள களியை உண்டபின் துப்பரவான பனங்கொட்டைகள் கிடைக்கின்றன. அன்று சவர்க்காரம் கிடைப்பது அரிதாயிருந்தபொழுது அழுக்கான உடுப்புகளைப் பனங்களி போட்டுத் தோய்த்து வெயிலில் உலர விட்டால் மாடுகள் உடுப்பிலுள்ள பனங்களி வாசத்தால் ஈர்க்கப்பட்டுத் துணிகளையும் சாப்பிட்டு விடுவதும் சாதாரண நிகழ்வாகும்.

பனம் பழச்சதையிலிருந்து கூழ்ப்பதநீர், ஊக்கம் தரும் உணவுகள், பழப்பாகு, குளிர்ப்பானம், பனம் பணியாரங்கள்,, மாச்சேர்ந்த களி வகைகள் ஆகிய நுகர்வுப் பொருட்களைச் செய்வர். பனம் பழச்சதையை அமெரிக்கா, கனடா, யேர்மனி, அவுத்திரேலியா, பிரித்தானியா போன்ற வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து அந்நியச் செலாவணியும் பெறுவர்.

**3. பதநீர் பனஞ்சாறு:** மரமேறிகள் ஆண், பெண் பனைகளின் புதுப் பாளைகளைத் தட்டிப் பதப்படுத்திப் பாளைகளின் நுனியைச் சீவி மண்முட்டிகளை அதிற் கட்டிக் காலையிலும் மாலையிலும் பதநீரைச் சேகரிப்பர். இப்பாளைகள் ஐந்து்ஆறு மாதங்களுக்குப் பதநீரைத் தொடர்ச்சியாகத் தரக்கூடியவை. ஆனால் யாழ்ப்பாணத்துப் பனை மரங்கள் ஏழு்எட்டு மாதங்கள்வரை பதநீரைத் தருகின்றன. ஆண் பனைகள் நாளொன்றுக்கு ஐந்து லீட்டர் பதநீரைத் தருகின்றபொழுது பெண் பனைகள் ஆண்பனைகளைவிட 50 சத வீதம் கூடத் தருகின்றன.

பதநீர் ஒரு சில மணிநேரத்தில் புளித்து விடும். புளித்ததும் அது 'கள்' ஆகிவிடுகின்றது. அதைக் குடித்தால் வெறிக்கும். பதநீர் புளியாதிருப்பதற்கு மரமேறிகள் சுண்ணாம்பை உள் முட்டிகளிற் தடவி விட்டுக் 'கருப்பணி' என்ற பதார்த்தத்தைச் சேகரிப்பர். இது கள்ளைப் போல் வெறிக்காது. இன்னும் கருப்பணி மிகவும் இனிமையானதால் மக்கள் அதை வாங்கி அருந்தி மகிழ்வர். மேலும் கருப்பணி குளிர்ச்சியைத் தரக்கூடிய பானமாகும்.

பதநீரிலிருந்து பனங்கட்டி, பனம்பாணி, பனஞ்சீனி, பனங்கற்கண்டு, வெல்லம், பனம் மிட்டாய், பனங்கூழ் ஆகியவற்றைச் செய்வர்.



உடன் கள்ளைச் சின்னமுத்து, அம்மை நோய் வந்தவர்களுக்குக் கொடுத்தால் நோயின் தாக்கம் குறைந்துவிடும். பதநீரைப் பேதி மருந்தாகவும் பாவிப்பர். கருப்பணி, பச்சையரிசி, பயறு ஆகியவற்றைச் சேர்த்துக் கருப்பணிக் கஞ்சி தயாரித்து அருந்துவர்.

**4. பனம் பாத்தி:** புரட்டாசி,ஐப்பசி மாதங்களில் மண்ணைக் கொத்தி இரண்டடி உயரத்துக்கு மண்ணைக் குவித்து எட்டடி நீளமும் ஆறடி அகலமுமான பாத்தி அமைத்துப் பனங்கொட்டைகளை அதன்மேல் அடுக்கி மண்ணால் மூடித் தண்ணீர் ஊற்றி விடக் கொட்டைகள் முளைத்து நிலத்தில் இரண்டு மூன்று அடிகள்வரை சென்று பனங்கிழங்காய் விளைந்து முற்றியவுடன் கிழங்குகளைப் பிடுங்கிப் பாவிப்பர். மணற்பாங்கான தென்மராட்சிப் பகுதியில் விளையும் பனங்கிழங்குகள் பெரியனவாகவும், தும்பு குறைந்தனவாகவும், மிக ருசியானதாகவும் இருக்கும்.

கார்த்திகை மாதத்தில் கொண்டாடப்படும் 'கார்த்திகை விளக்கீடு' அன்று கம்புகளின் ஒரு முனையில் துணியால் பந்தம்போல் சுற்றிக் கட்டி, அவற்றை எண்ணையில் நனைத்துப் பற்றவைத்து, அவற்றைப் படலை, வீட்டு முற்றம், வீட்டுப் பின்பக்கம், கிணற்றடி, குடங்கரை, வேம்படி, 'பனம் பாத்தி', மலசல கூடம், ஆட்டுப் பட்டி, மாட்டுப் பட்டி ஆகிய இடங்களில் பந்தங்களை நாட்டிச் சுவாமி அறையில் பூசைகள் செய்து மகிழ்ந்திருப்பர்.

**5. அவித்த பனங்கிழங்கு:** அவித்த பனங்கிழங்கைப் பிளந்து வெளியில் உள்ள நார்ப் பகுதியை நீக்கி விட்டுச் சிறு சிறு துண்டுகளாக்கி யாவரும் விருப்பி உண்பார்கள். சிலர் துண்டுகளாக்கிய பனங்கிழங்கை உரலிலிட்டு உப்பும், மிளகும், தேங்காய்ப் பூவும் போட்டு இடித்துத் துவைத்து உருண்டையாக்கி உண்பர். சிலர் பனங்கிழங்கை நெருப்புத் தணலில் வேகவைத்தும் சுலீப்பிடுவர்.

**6. ஒடியல்:** பனங்கிழங்கைப் பிளந்து வெயிலில் காயவைத்தால் அதை 'ஒடியல்' என்றழைப்பர். இதைப் பழுதுபடாமல் பல மாதங்கள் வைத்திருக்கலாம். ஒடியலைத் துண்டுகளாக்கி உரலில் இட்டு இடித்து வரும் மாவை 'ஒடியல்மா' என்று கூறுவர். இந்த மாவை நீரிட்டுக் குழைத்து அவித்தால் 'ஒடியல் பிட்டு' என்று கூறுவர். இப் பிட்டைத் தனித்தும், சோற்றுடனும் கலந்து கறிகளோடு சேர்த்துச் சாப்பிடுவர்.

ஒடியல் மாவுடன் பலவகைத் தானியங்கள் சேர்த்துச் சமைத்தால் 'ஒடியற் கூழ்' ஆகிவிடும். இதைச் சைவ உணவாக விரும்பி உண்பர். ஒடியல்மா, சள்ளை மீன், நண்டு, கருவாடு, இறால் ஆகியவற்றோடு கூழ் சமைத்தால் அசைவ உணவாகி விடும். ஒடியலை வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்கின்றனர்.

**7. புழுக்கொடியல்:** அவித்த பனங்கிழங்கைப் பிளந்து வெயிலில் காய வைத்தால் 'புழுக்கொடியல்' ஆகிவிடுகின்றது. இதைத் துண்டு போட்டுச் சாப்பிடுவர். இது மிகக் கடினமானது. வயது முதிர்ந்தோர் இதை இடித்து மாவாக்கித் தேங்காய்ப்பூ, கருப்பட்டி சேர்த்துச் சாப்பிடுவர். புழுக்கொடியலையும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்றனர்.

**8. பனம் பூரான்:** முளை வந்த பனங்கொட்டையைப் பிளந்தால் அதன் மத்தியிலுள்ள பருப்பைப் 'பூரான்' என்று கூறுவர். இது மென்மையானதும், இனிமையானதும் ஆகும். சிறார்கள் இதை விரும்பி உண்பர். இதைப் பதப்படுத்தினால் வெளிநாடுகளுக்கும் அனுப்பலாம்

**9. பனங்குருத்து:** பனைமர உச்சியின் நடுவிலுள்ள முதிராத இளங்குருத்தை யாவரும் விரும்பி உண்பர். அது மிகவும் இனிமையானது. இப்பனங்குருத்தில் 98 சத வீதமான நார்ச் சத்துள்ளது. பனை மரத்தைத் தறிக்கும் பொழுதோ அல்லது பனை முறிந்து விழும் பொழுதோதான் இக் குருத்தை எடுத்து உண்பர்.

**10. பனஞ்சோறு:** பனைமர உச்சியிலுள்ள குருத்தின் அடிப்புறமாகவுள்ள மென்மையான பகுதியைத்தான் 'பனஞ்சோறு' என்றழைப்பர். இது மென்மையானதும், இனிமையானதும் என்பதனால் மக்கள் யாவரும் விரும்பி உண்பர். இதிலும் பனங்குருத்தைப்போல் கூடிய நார்ச்சத்துண்டு.

# காசி யாத்திரை செய்வது எவ்வாறு?



கலைமாமணி கே.சி.லட்சுமி நாராயணன்

### பிதிரர் வழிபாடு

நாம் ஒவ்வொருவரும் ஒவ்வொரு பரம்பரையைச் சேர்ந்தவர்கள். பல ஆயிரம் வருடங்களாக நமது பரம்பரைகளில் சந்ததியினர் பிறந்து, வளர்ந்து வாழ்ந்து மறைந்திருக்கிறார்கள்.

நமக்கு முன்பாக நமது பரம்பரைகளில் எவ்வளவோ பேர் மரணம் அடைந்தார்கள். அவர்கள் பரலோகம் சென்றார்கள். அவர்களை நாம் பிதிரர்கள் என்று அழைக்கிறோம். (பித்ருக்கள் என்றும் குறிப்பிடலாம்)

பித்ருலோகம் என்று தனியாக ஒரு உலகம் இருக்கிறது. பித்ரு லோகத்திற்கு தலைவர் யமன். பித்ருபதி என்றே எமனுக்கு பெயர். இவ்வாறு வேதம் தெரிவிக்கிறது.

பிண்ணியம் செய்தவர்கள் இறந்தவுடன் பித்ருலோகம் போவார்கள். பாவம் செய்தவர்கள் நரக லோகத்திற்கு போவார்கள். பாவம் செய்பவர்கள் நரகம் சென்று துன்பப்படுவார்கள் என்று பண்டைய தமிழ் நூல்கள் மிகவும் வலியுறுத்திக் கூறியுள்ளன.

### நரகம்

திருவள்ளுவர் இயற்றிய திருக்குறளைப் புகழ்ந்து பேசாத தமிழர் இல்லை. அது ஒப்பற்ற உலகப் பொதுமறை என்று பெருமையுடன் கூறுகிறார்கள். திருக்குறள் நரகம் பற்றி எச்சரிக்கிறது.

"ஒருமைச் செயலாற்றும் பேதை எழுமையும் தான் புக்கு அழுத்தும் அன்று" என்று திருக்குறளில் ஒரு பாட்டு கூறுகின்றது. ஏழு வகைப் பிறப்புகளிலும் நரகத்தில் சென்று அழுந்துதற்குக் காரணமான தீய செயல்களை பாவ காரியங்களை அறிவு இல்லாதவன் ஒரு பிறவியிலேயே செய்ய வல்லவன் ஆவான் என்று இந்தப் பாட்டுக்கு அர்த்தம்.

நரகம் பற்றியும், பாவங்கள் செய்தால் நரகத்தில் உழல நேரிடும் என்பது குறித்தும் "நாலடியார்" என்ற சீரிய நூலும் பல பாடல்களில் குறிப்பிடுகிறது.

மாற்றான் மனைவியை விரும்புபவன் நரகத்திற்குச் செல்வான் என்பது நாலடியார் தரும் எச்சரிக்கை.

பண்டைய எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான புறநானூறும் நரகம் பற்றிப் பேசுகிறது. ஐம்பெரும் காப்பியங்களில் தலைசிறந்து விளங்குவது சிலப்பதிகாரம். புண்ணியம் செய்தால் நல்லன விளையும் என்றும், பாவம் புரிந்தால் தீயவை உண்டாகும் என்றும் சிலப்பதிகாரம் திரும்பத் திரும்பக் கூறுகிறது. நரக வாழ்க்கை உள்ளத்தை நடுங்க வைக்கும் துன்பத்தை தரும் என்றும் சிலம்பு எச்சரிக்கிறது.

### பிரார்த்தனை

பாவம் செய்து இறக்கின்ற பிதிரர்கள் நரகலோகத்திற்குச் சென்று கஷ்டங்களை அனுபவிப்பார்கள். அவர்களில் சிலர் சரீரம் முழுமையாக இல்லாமல் முண்டங்களாகவும் கிடப்பார்கள். பாப பலனை அனுபவித்துவிட்டு, அவர்கள் மீண்டும் இந்த உலகில் உயிரினங்களாகப் பிறப்பார்கள். மீண்டும் இங்கே உழலுவார்கள். 'புணரபி ஜனனம், புணரபி மரணம்" என்பதாக இது தொடரும் பாவங்களிம் பலனை முற்றிலும் அனுபவித்த பிறகு அவர்கள் சூரிய தேவனால் சுத்தம் அடைவார்கள். பின்னர், அவர்களும் பித்ருலோகம் செல்வார்கள்.

ஒருவர் இறந்ததும், அவரது மகன் அவரது உடலுக்கு தீ வைக்கிறான். அப்போது அவன் ஒரு மந்திரத்தை பக்தியுடன் சொல்ல வேண்டும். "நீ பித்ருலோகம் அடைந்து அங்கு உனக்கு விருப்பமான இடத்தில் இருப்பாயாக: சூரிய தேவன் உனக்கு உதவட்டும்" என்பது அந்த மந்திரத்தின் அர்த்தம்.

மகனின் இந்த பிரார்த்தனை தாயார் அல்லது தகப்பனார் பித்ருலோகம் செல்ல நிச்சயமாக உதவக்கூடும்.

### சிராத்தம்

பித்ருலோகத்தில் வாழ்கின்ற பிதிரர்கள் தேவர்களுக்குச் சமமானவர்கள் ஆவர்.

ஆகவே, அவர்களது சந்ததியினர் அவர்களை வழிபட வேண்டும். வழிபட்டால் அவர்கள் அனுக்கிரகம் செய்வார்கள். தேவர்களுக்கு செய்வதைப் போல பிதிரர்களுக்கும் யக்ஞங்கள் செய்ய வேண்டும் என்று வேதம் கட்டளையிடுகிறது.

அமாவாசை திதி தினத்தன்று தர்ப்பணம் செய்வதும் இறந்துபோன தினத்தன்று சிராத்தம் செய்வதும் மிகவும் அவசியம். மாதப்பிறப்பு, கிரகண புண்ணிய காலம் போன்ற காலங்களிலும் தர்ப்பணம் செய்ய வேண்டும்.

சிராத்தம் என்ற சொல்லை சிலர் திவசம் என்று கூறுகிறார்கள். அது தவறு. சிரத்தையோடு செய்யப்பட வேண்டியது சிராத்தம். சிராத்தம் செய்யாமல் விட்டுவிடுவது பிதிரர்களுக்குச் செய்யும் துரோகம். அது மகாபாவம். திருமணம் போன்ற சுபகாரியங்களின் போதும் பிதிரர்களை வழிபட வேண்டும். நாந்தி சிரார்த்தம் என்று அந்த வழிபாட்டுச் சடங்கை குறிப்பிடுவார்கள். பிதிரர்களுக்கு மறைந்த மூதாதையர்களுக்கு நாந்தி சிராத்தம் செய்த பிறகுதான் தேவ காரியத்தை ஆரம்பிக்க வேண்டும்.

தேவர்களை விட முக்கியமானவர்கல் பிதிரர்கள்.

### தலைமுறைகள்

பிதிரர்கள் எல்லோரும் முக்கியமானவர்கள் எனினும் அவர்களில் பித்ரு (தந்தை), பிதாமகன் (பாட்டணார்), பிர பிதாமகன் (பாட்டணின் தந்தை) ஆகியவர்கள் மிகவும் முக்கியமானவர்கள்.

மாதா (தாயார்), பிதாமஹி (தந்தை வழிப்பாட்டி) பிரபிதாமஹி (பாட்டணின் தந்தையின் மனைவி) ஆகியவர்களும் மிக முக்கியமானவர்கள். இவர்கள் தந்தை வழி மூதாதையர்கள்.

தாய் வழியில் மூன்று தலைமுறையினரும் இவ்வாறே மிக முக்கியமானவர்கள்.

ஒரு பரம்பரையில் உறவினர்களாக ஏராளமான பிதிரர்கள் இருப்பார்கள். அவர்கள் எல்லோரையும் கூட வழிபட வேண்டும்.

"தென்புலத்தார், தெய்வம், விருந்தொக்கல், தான் என்று ஆங்கு ஐம்புலத்து ஆறு ஓம்பல் தலை" என்பது திருக்குறள்.

பிதிரர்கள், தேவர்கள், புதிதாக விருந்தாளியாக வருபவர்கள், உறவினர், தான் என்னும் ஐந்து வகையினரையும் காப்பது இல்லறத்தானின் தலைசிறந்த கடமை ஆகும் என்று திருக்குறள் கூறுகிறது.

பிதிரர்கள் நித்தியமானவர்கள். அவர்கள் பித்ருலோகத்தில் உள்ளனர். அவர்களுடன் அவர்களது சந்ததியினர் தொடர்பு கொள்ள முடியும்.

பிதிரர்களை வழிபடுவதற்கு உலகத்திலேயே மிகவும் சிறந்தது காசி என்ர ஒப்பற்ற தலம்.

### சொன்னாலும் புண்ணியம்

பிதிரர்கள் என்று விளங்கும் தந்தை வழி, தாய் வழி முன்னோருக்கு உரிய வழிபாட்டுக் காரியங்களைச் செய்வதற்கு உலகத்திலேயே மிகவும் சிறந்த பூமி காசி என்று ஏற்கனவே குறிப்பிட்டுள்ளேன்.

சிவபெருமான் அருளிய ஒரு உபதேசம் காசி நகரின் இந்த ஈடு இணையில்லாத சிறப்புக்கு பிரமாணமாக விளங்குகிறது.

ஆண்டவன் ஒரு மகா வக்கியத்தை உபதேசித்திருக்கிறார். "காசியில் மரணம் அடைகின்ற ஒருவரது ஜீவன் பரமாத்ம ஸ்ரூபத்தில் ஐக்கியமாகி விடுகிறது. அந்த ஜீவனுக்கு மறுபிறப்பு கிடையாது" என்பதே அந்த மகா வாக்கியம்.

காசியில் இறக்கின்ற ஒருவரது உடல் இறைமைத்தன்மை பெற்றுவிடுகிறது. அதாவது சவம் சிவமாகிவிடுகிறது.

காசி நகரின் ஒப்பற்ற மகிமை இது. அங்கு பிணங்கள் தெய்வங்களாகி விடுகின்றன.

எனவே தான், காசியில் ஒரு பிணத்தைக் கண்டால் அதை நமஸ்கரிப்பது வழக்கம். இந்த வழக்கம் இன்று நேற்று அல்ல, பல நூறு ஆண்டுகளாக உள்ளது.

இப்போது கூட காசிக்கு செல்பவர்கள் அங்கு தற்செயலாகப் பிணங்களைக் காண நேர்ந்தால், அவற்றை இறைவனின் வடிவங்களாகக் கருதி கும்பிடுகிறார்கள்.

காசியை கரையாக அமைத்துக் கொண்டு கங்கை நதி ஓடுகிறது. அதில் பிணங்களைப் போட்டு விடுவார்கள். பிணங்கள் நதியில் மிதந்து செல்லும். இது வழக்கமாகக் காணக்கூடிய ஒரு காட்சி. இவ்வாறு மிதக்கிற உடல்களை வணங்கினால் பெரும் புண்ணியம் கிடைக்கும்.

"காசி மரண மோட்ச விசாரம்" என்ர அரிய நூல் சவம் சிவமாகும் செய்தியைத் தருகிறது.

### யோகி ஸ்ம்வர்த்தகர்

மருத்தன் என்ற பெயரில் ஒரு மன்னன் வாழ்ந்தான். ஸ்ம்வர்த்தர் என்ற மகா யோகியைத் தரிசனம் செய்து அருள்பெற வேண்டும் என்று அந்த மன்னன் விரும்பினான்.

அவன் நாரத முனிவரைச் சந்தித்து ஸ்ம்வர்த்தரைத் தரிசனம் செய்ய மார்க்கம் என்ன என்று கேட்டான். "ஸ்ம்வர்த்தர் யோகிகளில் தலைசிறந்தவர். அவர் உடலில் ஆடை எதுவும் அணியாமல் திகம்பரராகத் திரிந்து கொண்டிருப்பார். அவரை நீ தரிசனம் செய்ய ஒரு வழி உள்ளது" என்று நாரதர் சொன்னார்.

"நீ காசி நகர எல்லைக்குள் ஒரு பிணத்தை உனக்கு அருகில் வைத்துக் கொண்டு தயாராகக் காத்திரு. மாலை நேரத்தில் ஸ்வர்த்தர் ஸ்ரீவிசுவேசுவரர் தரிசனத்திற்காக வருவார். வருகின்ற வழியில் நீ வைத்திருக்கும் பிணத்தை அவர் கண்டால், ஸ்ரீ விசுவேசுவரர் தரிசனம் ஆகிவிட்டது என்று நிறைவு கொண்டு திரும்பிப் போய்விடுவார். அவ்வாறு யார் செய்கிறாரோ, அவர்தான் மகா யோகியான் ஸ்ம்வர்த்தர் என்று நீ அறிந்து கொள்ளலாம்" என்று நாரதர் கூறினார்.

மன்னன் மருத்தன் மகிழ்ச்சி அடைந்தான். நாரத முனிவர் கூறிய யோசனைப்படியே ஸ்ம்வர்த்தர் வரும் பாதையில் ஒரு பிணத்துடன் காத்துக் கொண்டிருந்தான். ஸ்ம்வர்த்தர் வந்தார். பிணத்தை வாங்கினார். உடனே அவர்தான் ஸ்ம்வர்த்தர் என்று மன்னன் தெரிந்து கொண்டான்.

ஸ்ம்வர்த்தருடைய பெரும் உதவியுடன் ஒரு மகா யாகத்தை மன்னன் மருத்தன் செய்தான். அதன் பயனாக அந்த மன்னன் சரீரத்துடன் சுவர்க்க லோகத்துக்குச் சென்றான்.

மகா பாரதத்தில் மன்னன் மருத்தனின் இந்த வரலாறு கூறப்பட்டிருக்கிறது. மகாயோகியான ஸ்ம்வர்த்தர் காசியில் கண்ட பிணத்தை ஆண்டவனாகவே கருதி வழிபட்டார் என்பதை இந்த வரலாறு தெரிவிக்கிறது.

### மயான பூமி

காசி நகரம் ஒரு மாபெரும் சுடுகாடு.

பிரளய காலத்தில் எல்லா உயிரினங்களும் அழிந்து விடும். அந்தக் காலத்தில் எல்லா உயிரினங்களும் பிணங்கள் ஆகின்றன. அவை காசியில் குவிந்து தங்குகின்றன. ஆகவே தான் காசி ஒரு மகா ஸ்மசானம் ( மாபெரும் மயானம் ) என்று விளங்குகிறது.

தர்ப்பணம், சிராத்தம் ஆகிய காரியங்களின் போது, பிதிரர்களை முதலில் ஆவாஹனம் செய்வார்கள். அதாவது தர்ப்பையில் அவர்களை எழுந்தருளச் செய்வார்கள்.

காசியில் தர்ப்பணம் அல்லது சிராத்தம் செய்தால் இவ்வாறு ஆவாஹனம் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. ஏன் தெரியுமா? அங்கு பிதிரர்கள் நிலையாக இருக்கிறார்கள். அவர்களை அழைக்க வேண்டாம். அவர்கள் அங்கேயே உள்ளனர்.

காசி நகரில் மட்டும்தான் பிதிரர்கள் (முன்னோர்) ஸ்திரமாக இருக்கிறாரக்ள்.

காசி நகருக்கு மற்றொரு பெரும் மகிமை உண்டு. பஞ்சமகா பாவங்கள் என்று சொல்கிறோம் அல்லவா? இவை காசி நகருக்குள் நுழைவது இல்லை. ஆகவே பஞ்ச மகா பாவங்கள் செய்தவரக்ளும், காசிக்குச் சென்றால் அந்தப் பாவங்கள் அவர்களை விட்டு ஓடிவிடும்.

பாவங்கள் தொலைய வேண்டுமென்று விரும்புகிறவர்களுக்குக் காசியை விட வேறு கதி இல்லை என்று உறுதியாகக் கூறலாம்.

கலி காலத்தில் "ஸ்கந்த புராணம்" காசியின் மகிமையை விரிவாகவே கூறுகிறது.

காசி என்ற திருத்தலம் மூவுலகங்களிலும் மிகவும் சிறந்த புண்ணிய பூமி என்றும், காசியில் பாவங்கள் நெருங்காது என்றும் ஸ்கந்த புராணம் உறுதி கூறுகிறது.

காசி நகரில் 28 கோடி சிவலிங்கங்கள் பிரகாசிக்கின்றன என்றும் அது குறிப்பிடுகிறது.

கலி காலத்தில் பாவங்கள் மிகுந்து விட்டன. எல்லாத் துறைகளிலும் அக்கிரமங்கள் ஆதிக்கம் செலுத்துகின்றன. இந்தக் கலி காலத்தில் மக்களுக்குப் புகலிடம் காசி நகரமே என்று "பிரம்ம வைவர்த்த புராணம்" தெரிவிக்கிறது.

கலி காலத்தில் அருள் புரிபவர் விசுவேசுவரர், வாரணாஸி என்ற காசியே புண்ணிய பூமி, கங்கையே உன்னதமான நதி, காசியில் முன்னோரை வழிபடுவதும் தானங்கள் அளிப்பதும்தான் உத்தமமான தர்மம். இவ்வாறு "பிரம்ம வைவர்த்த புராணம்" குறிப்பிடுகிறது.

காசியில் சகல தேவதைகளும், எல்லாப் புனித தீர்த்தங்களும் இருக்கின்றன என்றும், தீர்த்தங்களையும், தேவதைகளையும் வழிபடுவதற்கு காசிக்கு வெளியே போக வேண்டிய அவசியம் இல்லை என்றும், அந்தப் புராணம் சுட்டிக் காட்டுகிறது.

## மண்ணுக்கும் மகிமை

காசியின் மகிமையை "காசி கண்டம்" கீழ்க்கண்டவாறு விவரிக்கிறது.

காசியில் மரணம் ஏற்படுவது மிகவும் மேலானது. காசியில் மரணம் அடைந்தவுடன் ஒரே ஜென்மத்தில் மோட்சம் அடைவது நிச்சயம்.

காசியில் இறப்பவர்களை தூஷிப்பது கூடத் தவறு. அது பாவம் என்றே கருதப்படும். காசியில் உயிர் துறப்பவர்களைப் பாராட்டுபவரகளும் புண்ணியம் அடைவார்கள். பின்னர் மோட்சத்தையும் பெறுவார்கள்.

காசி திருத்தலத்தின் மண்ணில் உள்ள துகள்கள் காற்றில் பறந்து ஒருவரது தலைமீது தற்செயலாக விழுந்தால் கூட அவர் பெரும்பயன் அடைவார். அவரது தலை சந்திரகலையுடன் கூடியதாக ஆகிவிடும். அதாவது சிவபெருமானின் அம்சம் கிடைத்துவிடும்.

சிவபெருமான் ஒரு நிமிடம் கூட காசியில் இருந்து விலகுவது இல்லை. எனவே இந்த தலத்திற்கு "அவிமுக்தம்" என்று பெயர் வழங்குகிறது.

## சொன்னாலும் புண்ணியம்

கங்காநதி தீரத்தில் திகழும் காசி எல்லா மக்களுக்கும், பரமசிவத்திற்கும் ஆனந்தம் கொடுக்கிறது. எனவே சிவபெருமான் இதற்கு "ஆனந்தவனம்" என்று பெயர் தந்து அருளினார்.

காசியின் தென்பாகத்தில் அஸி என்ற நதியும், வடபாகத்தில் வரணா என்ற நதியும் எல்லைபோல் அமைந்து, கங்கை நதியில் சங்கமம் ஆகின்றன. எனவே இந்த திருத்தலத்திற்கு வாரணாசி என்ற பெயர் வழங்குகிறது.

காசி என்ற சொல்லை திரும்பத் திரும்பப் பலமுறை பக்தியுடன் உச்சரித்தாலும் பெரும் புண்ணியம் ஏற்படும். பாவங்கள் அழியும் நரகத்தில் உழல வேண்டிய நிலை வராது.

இவ்வாறு "காசிகண்டம்" பல அரிய செய்திகளைத் தெரிவிக்கிறது.

**தங்கினால் புண்ணியம்**

காசியில் நியமம் தவறாது, மூன்று தினங்கள் ஒருவர் தங்கியிருந்தால், அசுவமேத யாகம், ராஜஸூய யாகம் ஆகியவற்றை செய்தால் கிடைக்கும் புண்ணியத்தை அவர் அடைவார் என்று ஸ்கந்த புராணம் உறுதி தருகிறது.

வேதத்தில் மிகவும் பிரசித்தமானது. அசுவேமேத யாகம். இந்த யாகத்தைச் செய்பவன் சாம்ராஜ்யத்தை அடைவான். தசரதன், ஸ்ரீராமர், யதிரிஷ்டர் முதலியவர்கள் அசுவமேத யாகம் செய்தார்கள் என்று இதிகாசங்கள் கூறுகின்றன. இது சுமார் ஒரு வருடம் செய்ய வேண்டிய யாகம்.

இராஜஸீக யாகம் இருபத்தி மூன்று ஸ்ரௌத யாகங்களில் ஒன்று. இதுவும் மிகவும் சிறப்பானது. பேரரசர்கள் மட்டுமே ராஜஸீக யாகம் செய்ய முடியும்.

தமிழகத்தில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இராகஸீக யாகம் செய்த மாமன்னர்கள் இருந்தார்கள். சோழ மாமன்னர்களில் "இராகஸீயம் வேட்ட பெரு நற்கிள்ளி" என்ற பெயருடன் ஒரு பேரரசன் விளங்கினான். அவன் இராஜஸீக வேள்வி நடத்திப் புகழ் பெற்றதை "புறநானூறு" நூலின் 10 வது பாடல் தெரிவிக்கிறது


இராஜஸீக யாகமும், அசுவமேத யாகமும் செய்வதற்கு அரிய பெரு யாகங்கள். இவற்றைச் செய்வது மிகவும் சிரமம். இவற்றை செய்து முடிப்பவர்கள் பெரும் புண்ணியம் அடைவார்கள் என்று வேதங்கள் தெரிவிக்கின்றன.

காசி திருத்தலத்தில் மூன்று தினங்கள் நியமத்துடன் ஒருவர் வாழ்ந்தால் போதும், அவருக்கு இந்த இரண்டு பெரும் யாகங்களைச் செய்தால் கிடைக்கக்கூடிய புண்ணியம் சுலபமாக வந்து சேரும் என்று ஸ்கந்த புராணம் கூறுகிறது.

காசி என்ற புண்ணிய பூமியின் இத்தகைய மகிமையை முழுமை செய்வது, புனிதம் மிகுந்த கங்கை நதி.

**கங்கையின் வரலாறு**

உலகத்தின் முதல் நூல் ரிக், யஜுர், சாம,



அதர்வணம் என்று வகைப்படுத்தப்பட்டுள்ள வேதம். இதை 'முது நூல்' என்று புறநானூறு குறிப்பிடுகிறது. மிகப் பழைய நூல் என்று இதற்கு அர்த்தம். ஹிந்து மதத்திற்கு அடிப்படையாக வேதம் விளங்குகிறது.

ரிக் வேதத்தில் கங்கை நதி பற்றிய குறிப்பு இருக்கிறது,

இந்தியாவில் ஓடும் நதிகளில் மிகவும் புனிதமானது கங்கை, புராணங்களும் இலக்கியங்களும் கங்கையின் சிறப்பை விவரித்துள்ளன. மனித நாகரிகம் கங்கைக் கரையில் தோன்றிப் பரவியது என்று அறிஞர்கள் கூறுகிறார்கள்.

கங்கை நதிக்கரையில் காசி அமைந்து திகழ்கிறது. காசியின் தென் பாகத்தில் ஓடும் அஸி நதியும் வட பாகத்தில் ஓடும் வரணா நதியும் கங்கை மகா நதியில் சங்கமம் ஆகின்றன.

**பகீரதன் தவம்**

கங்கை நதிக்கு பாகீரதி என்ற பெயர். அது உற்பத்தியாகும் இடத்தில் வழங்குகிறது. தேவ உலகத்திலிருந்து மண் உலகத்திற்குப் பகீரதன் கங்கையைக் கொண்டு வந்தான். ஆகவே பாகீரதி என்ற பெயர் அமைந்தது.

கபிலர் என்ற மாமுனிவர் சாபத்தினால் சகர புத்திரர்கள் எரிந்து சாம்பல் ஆனார்கள். அவர்கள் சுவர்க்க லோகம் செல்ல வேண்டும் என்பதற்காக பகீரதன் கங்கை அன்னையை நோக்கி தவம் புரிந்தான். கங்கை தேவி பிரத்தியட்சம் ஆனாள்.

"நான் பூலோகம் வருகிறேன். ஆனால் எனது வேகத்தைத் தாங்கக்கூடியவர்கள் பூமியில் எவரும் இல்லை. சிவபெருமான் ஒருவரே எனது வேகத்தைத் தாங்கக் கூடியவர்; எனவே, அவரை முதலில் வேண்டிக் கொள். என்ரு கங்கை அன்னை பகீரதனுக்குக் கூறினாள். பிறகு அவள் மறைந்தாள்.

பகீரதன் சிவபெருமானை நோக்கி கடுந்தவம் புரிந்தான். சிவபெருமான் அவன் முன்தோன்றி "உனக்கு என்ன வரம் வேண்டும்"? என்று கேட்டு அருளினார்.

"இறைவனே! எனது முன்னோராகிய சகர புத்திரர்கள் சாம்பல் ஆகிக் கிடக்கிறார்கள். கங்கை நீர் புனிதம் செய்தால், அவர்கள் சுவர்க்க லோகல் செல்ல இயலும். எனவே கங்கை பூலோகத்திற்கு வரவேண்டும். அதற்கு தாங்கள் உதவி அருள வேண்டும். என்று பகீரதன் பிரார்த்தனை செய்தான்.

## பெரிய திருமொழி

பகீரதன் கேட்ட வரத்தை இறைவன் அளித்து அருளினார். வானிலிருந்து பெரும் ஆராவாரத்துடன் கங்கை பூமியை நோக்கிப் பாய்ந்தாள். அவளது வேகம் கண்டு அனைவரும் அஞ்சினாரகள். ஆனால் சிவபெருமான் இலேசாகப் புன்னகை புரிந்தார். அவரது சடையில் கங்கையை எளிதில் தாங்கிக் கொண்டுவிட்டார். கங்கையின் வேகம் தணிந்தது. பிறகு அவள் தரையில் விடப்பட்டாள்.

சாம்பலாகிக் கிடந்த சகர புத்திரர்கள் இருந்த இடத்தில் கங்கை பாய்ந்தாள். அவரது மிக மேலான புனிதம், சகர புத்திரர்களை தூய்மை செய்தது. சகர புத்திரர்கள் சுவர்க்க லோகம் சென்று அடைந்தார்கள். இதுதான் கங்கை நதி பூலோகத்திற்கு வந்த வரலாறு.

திருமங்கை ஆழ்வார் அருளிய பெரிய திருமொழியில் கங்கையின் பெருமையை பல சொற்களில் அவர் விவரிக்கிறார்.

"வானவர் வணங்கும் கங்கை" என்றும் "முது நீர்க்கங்கை" என்றும் அவர் குறிப்பிட்டுப் பகீரதன் கங்கையை பூமிக்கு கொண்டு வந்த வரலாற்றைத் தெரிவிக்கிறார்.

## பசுவின் முகம்

கங்கை இமய மலையில் உற்பத்தி ஆகிறது. கங்கோத்ரி என்ற இடத்திற்கு அருகில் இரண்டு மலைகளுக்கு நடுவிலிருந்து கங்கை தோன்றி வெளிவரும் பரப்பு, மனிதனின் செவி வடிவில் இருக்கிறது.

ஒரு மாமுனிவரின் செவி வழியே கங்கை வெளிவந்தாள் என்று கூறுகிறார்கள். அதை உறுதிப்படுத்துவது போல் இந்த இடம் உள்ளது.

பல ஆண்டுகள் பல முறை வெள்ளம் ஏற்பட்ட பிறகும், செவி வடிவம் இன்று வரை மாறவில்லை. விஞ்ஞானிகளும் வியந்து போற்றும் ஓர் அதிசயம் இது.

கங்கோத்திரிக்கு வடக்கில் கங்கை உற்பத்தித்தவம் உள்ளது. தெற்கே இரண்டு மைல் தொலைவில் பிந்துசாரம் என்ற இடம் இருக்கிறது. இதுவே பகீரதன் தவம் செய்த பூமி.

கங்கோத்திருக்கு அருகே உற்பத்தியாகும் கங்கை சிறிது தூரத்திற்குப் பிறகு கோமுகி என்ற இடத்தில் ஒரு குகையின் வாயிலிருந்து குபு குபு என்று பிரவாகிக்கிறாள்

இந்த குகை அமைந்துள்ள பகுதி பசுவின் முகம் போல் காணப்படுகிறது. எனவே தான் கோமுகி என்ற பெயர் அமைந்துள்ளது. கோ என்றால் பசு. கோமுகி என்றால் பசு முகம் கொண்டவள் என்று அர்த்தம்.

சங்ககால் நூல்களில் ஒன்றான புறநானூற்றில் கங்கை பற்றி ஒரு பாடல் குறிப்பிடுகிறது. அது குமணனைப் பெருஞ்சித்தரனார் என்ற புலவர் பாடியது. கங்கை நதியுடன் தொடர்பு தமிழக மக்களுக்கு இரண்டு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே இருந்து வந்துள்ளது என்பதை இந்தக் குறிப்பிலிருந்து அறியலாம்.

பாவம் நீங்கும்

ஸ்ரீ வில்லிப்புத்தூரில் அவதரித்தவர் பெழியாழ்வார். "கங்கை" என்று வாயால் சொன்னாலே போதும், பாவங்கள் நீங்கும் என்று அவர் கூறியுள்ளார். கங்கையின் புனிதம் அத்தகைய சிறப்பு வாய்ந்தது.

"கங்கை கங்கை என்ற வாசகத்தாலே கடு வினை களைந்திட நிற்கும்" என்பது பெரியாழ்வாரின் திருமொழி.

"கங்கையில் முழுகி எழுந்தால்" பாவங்கள் போய் விடும் என்று பெரியவர்கள் கூறுவார்கள். முழுகுதல் என்ற சொல்லை கவனிக்க வேண்டும். தலையுடன் உடல் முழுவதும் நீருக்குள் அமிழ்ந்து எழுவதையே முழுகுதல் என்ற சொல் குறிக்கிறது.

கங்கையில் மூழ்கி எழுந்தவர்களை யம தூதர்களும் நெருங்குவதற்கு பயப்படுவார்கள். கங்கை நீர் அத்தகைய ஆற்றல் வாய்ந்தது.

கங்கை நதி பாய்ந்து செல்லும் பிரதேசங்கள் எல்லாமே புண்ணியத் தலங்கள். இறப்பவர்களது உடல் எலும்புகளைக் கங்கை நதியில் பக்தியுடன் இட்டால், இறந்தவர்களுக்கு சொர்க்கம் கிடைக்கும். அஸ்தி கரைப்பு என்று இதைக் கூறுகிறோம்.

தானம் சிறந்தது. ஒரு நதியின் கரையில் செய்கின்ற தானம் மிகச் சிறந்தது. கங்கை நதியின் கரையில் செய்கின்ற தானம் எல்லாவற்றிற்கும் மிக மேலான சிறப்பு உடையது.

தவம் செய்வதற்கு மிக உகந்த இடம் கங்கை நதியின்கரை. அங்கு தவம் செய்து பெரும் பயன் அடைந்தவர் பலர் என்று புராணங்கள் தெரிவிக்கின்றன.


கங்கைக் கரையில் பல ஆலயங்கள் எழுப்பப்பட்டுள்ளன. இவை மனதிற்கு அமைதியையும் ஆனந்தத்தையும் தருபவை.

புனிதம் வாய்ந்த பெண்மணிக்குக் கங்கை நதியை உவமை கூறுவது வழக்கம்.

திரிவேணி சங்கமம்.

கங்கைக் கரையில் உள்ள புண்ணியத்தலங்களில் தலையாய சிறப்பு பெற்றவை காசி, பிரயாகை, ஹரித்துவார் ஆகியவை. இவற்றில் காசிக்கு முதலிடம்.

பிரயாகை அலகாபாத் என்று



அழைக்கப்படுகிறது. ஹரித்துவாரம் என்ற சொல்லின் திரிபு ஹரித்துவார்.

பிரயாகை பெருஞ்சிறப்பு வாய்ந்தது. கங்கை நதிக்கு அடுத்தப்படியாக கருதப்படும் யமுனை நதி, இங்கு கங்கையில் சேருகிறது. அலகாபாத் அருகில் கங்கை, யமுனை, சரஸ்வதி ஆகிய மூன்று தெய்வீக நதிகள் கூடுகின்றன. இந்த இடத்திற்கு திரிவேணி சங்கமம் என்று பெயர்.

பண்டைய இலக்கியங்களில் தொழுனை என்ற பெயரில் யமுனை குறிப்பிடப்பட்டுள்ளது. மாயனை மன்னு வட மதுரை மைந்தனை, தூய பெரு நீர், யமுனை துறைவனை' என்று ஆண்டாள் பாடியிருக்கிறாள். கண்ணன் அவதரித்த மதுரைப் பதியையும், யமுனை நதித் துறையையும் ஆண்டாள் இங்கே போற்றுகிறாள்.

யமுனை நதியின் நீரைக் குடித்தாலே சோம யாகம் செய்த பலன் கிடைக்கும் என்று கூறுவார்கள். யமுனையின் கரையில் அமர்ந்து,

காயத்திரி ஜபம் செய்வது விசேஷமான பலனைத் தரும்.

### பிரயாகை

சரஸ்வதி என்ற நதி அந்தர் வாஹினியாக இருக்கிறது. அதாவது மறைவாக ஓடுகிறது. கங்கை, யமுனை, சரஸ்வதி ஆகிய மூன்றும் கூடுகின்ற இடம் மிகவும் பவித்திரமானது. மூன்றும் கலந்த தீர்த்தத்திற்கு "தீர்த்த ராஜா" என்று பெயர்.

இங்கு பிரம்மா பல யாகங்களைச் செய்தார். அதனால் பிரயாகம் என்று பெயர் ஏற்பட்டது. அதுவே பிரயாகை என்று ஆயிற்று.

கங்கை நதியின் நிறம் வெண்மை; யமுனை கருமை நிறம் கொண்டது. திருவேணி சங்கமத்தில் இந்த இரு வேறு நிறம் கொண்ட நதிகளின் சங்கமத்தை மிகவும் தெளிவாக பார்க்கலாம்.

திரிவேணி சங்கமத்தில் ஒருவர் தமது உடலைத் தியாகம் செய்தால், அவர் மோட்சம் அடைவார், இது உறுதி.

பரம பவித்திரமான திரிவேணி சங்கமத்தை தரிசித்தாலே கூடப் போதும் பாவம் விலகும் என்று கூறுவார்கள்.

ஹிந்து மதத்தில் பிறந்த ஓவ்வொருவரும் வாழ்க்கையில் ஒரு முறையேனும் திரிவேணி சங்கமம் செல்ல வேண்டும். அங்கு நியமப்படி சடங்குகளை செய்ய வேண்டும்.

காசி யாத்திரையில் பிரயாகையும் திரிவேணி சங்கமச் சடங்குகளும் மிக முக்கியமான பங்கு வகிக்கின்றன.

### தீர்த்த யாத்திரை ஏன்?

இகலோக வாழ்க்கைக்கும், பரலோக வாழ்க்கைக்கும் சாதனமாக இருப்பது தர்மம்.

தர்மம் எல்லா பாவங்களையும் அகற்றிக் கொள்ளவும், எல்லா புண்ணியங்களையும் பெற்றுக் கொள்ளவும் உதவும்.

"தர்மம் சர" என்று வேதம் ஆணையிடுகிறது. "உயிரை விட்டாலும் விடுங்கள், தர்மத்தை விடாதீர்கள்" என்று வியாசர் தெளிவாகக் கூறியுள்ளார்.

உலகப் பொதுமறை என்று எல்லோராலும் புகழப்படுவது திருவள்ளுவர் இயற்றிய திருக்குறள். அதில் தர்மத்தின் பெருஞ்சிறப்பை ஓர் அதிகாரமே எடுத்துக் கூறுகிறது. "அறன் வலியுறுத்தல்" என்பது அதன் தலைப்பு. "தர்மத்தைக் காட்டிலும் நன்மை தருவதும் இல்லை; தர்மத்தை மறைப்பதைக் காட்டிலுமே கேடு தருவதும் இல்லை" என்று அதன் ஒரு பாடல் குறிப்பிடுகிறது.

தர்மம் பேண வேண்டும், அதர்மம் விலக்க வேண்டும் என்பது இந்து சமயத்தின் ஓர் அடிப்படைக் கோட்பாடு.

குளங்கள் வெட்டுவது, அன்னசத்திரம் கட்டுவது, யாகங்கள் செய்வது, கோயில்களை எழுப்புவது, கல்வி கற்பிப்பது, குடிநீர் தொட்டிகளை வைப்பது, விலங்குகளுக்கு உணவு அளிப்பது

இவ்வாறு ஏராளமான தர்மக் காரியங்களைச் செய்யுங்கள் என்று இந்து மத சாஸ்திரங்கள் போதிக்கின்றன.

"அனாதையாக ஒரு பிரேதம் கிடந்தால், அதை எடுத்து முறைப்படி அடக்கம் செய்யுங்கள்; இது உயர்ந்த தர்மக் காரியம், அசுவமேத யாகம் செய்வதால் கிடைக்கக்கூடிய புண்ணியம் அனாதை பிணத்தை அடக்கம் செய்வதால் கிடைக்கும் என்றும் சாஸ்திரங்கள் கூறுகின்றன.

### பிரதான தர்மம்

இவ்வாறு அநேக தர்மக் காரியங்கள் பேசப்படுகின்றன. தீர்த்த யாத்திரை ஒரு பிரதான தர்மம், நாம் கலியுகத்தில் வாழ்கிறோம். கலியுகத்தில் தீர்த்த யாத்திரை என்றால் என்ன, அதை எவ்வாறு செய்வது என்று உரியவர்கள் மூலமாகத் தெளிவாக அறிந்துக் கொண்டு, பிறகு யாத்திரைகளை மேற்கொள்ளுவது நல்லது.

நமது பாரத நாடு மிகச் சிறந்த புண்ணிய பூமி. இது வெறும் பேச்சு இல்லை. இது நிதரிசனமான உண்மை.

நமது நாட்டில் கங்கை, யமுனை, நர்மதை, கோதாவரி, காவிரி முதலிய பல புனிதமான நதிகள் ஓடுகின்றன. தமிழ்நாட்டில் இமயமலை முதல் திருப்பதி, திருமலை, பழனி மலை வரை ஏராலமான புண்ணிய மலைகள் உள்ளன.

தொடரும்

கரவை மு. தயாளன்

அத்தியாயம் 21

# சில மனிதர்களும் சில நியாயங்களும்

நியாயங்கள் ஒவ்வொரு மனிதருக்கும் ஒவ்வொருவிதமாகத் தோற்றுகின்றது. தங்கள் தங்கள் சுய தேவைகளொடு நியாயத்தைச் சம்பந்தப்படுத்தி நியாயத்தைக் கொச்சைப் படுத்துகிறார்களெயொழிய உண்மைகயைக் கண்டறியக்கூடியளவுக்கு நியாயத்தை தர்மத்தோடு சேர்த்து வைத்து யாரும் பார்ப்பதில்லை. இப்படிப்பார்தால் நியாயம் ஆளுக்காள் மாறுபடுவதற்கான காலீணம் இல்லவே இல்லை. ஒரேயொரு நியாயம்தான் எல்லாருக்கும்.

சாரங்கனின் மாமா பையன் சிறீ என்கின்ற சிறீதாஸ் பக்கமிருக்கும் நியாயங்களையும் பாரத்தாகவேண்டும்.

சிறீதாஸை நண்பர்கள் தாஸ் என்றுதான் கூப்பிடுவார்கள் நாமும் அப்படியே கூப்பிடுவோம்.

தாஸ் பிறந்தது இந்நாட்டில். பல வகையான கலாச்சார ச+ழலில் தன் வாழ்க்கையைத் தொலைத்துவிட்டு இருப்பவன்தான் தாஸ்.

தாஸினுடைய நடவடிக்கைகள் சாதாரண தமிழ்ப் பையனைவிட வித்தியாசமாகத்தான் இருந்தன. ஆனால் அவனுடைய நடவடிக்கைகள் எந்த வகையிலும் சமூகத்துக்கு எதிரானவையாக இல்லை.

லண்டனில் பிறந்து வளர்ந்து தகாத சில நண்பர்களின் சேர்க்கையால் தகாதவனாக மாறிப்போனவன்தான் தாஸ். பல தடவைகள் அந்தத் தொடர்புகளிலிருந்து வெளியேவர பிரயத்தனங்கள் செய்தும் வரமுடியாமல் இறுதியில் ஒரு பிரச்சினையில் மாட்டுப்பட்டு சிறைக்குச் சென்று பிணையில் வெளியே வந்திருக்கிறான். இந்த இடையில் அவன் சந்தித்த ஒரு பெண்தான் ஆரணி.

ஆரணியுடைய சந்திப்பு அவன் வாழ்க்கையில் பல மாற்றங்களை ஏற்படுத்த ஆரம்பித்திருந்தது.

அந்த மாற்றங்களை ஜீரணிக்க முடியாத நண்பர்கள் திட்டமிட்டு அவனை மாட்டிவிட்ட சம்பவம்தான் அன்றைக்கு நடந்தது.

அந்த சம்பவத்துக்கும் தாஸிற்கும் இடையில் எந்தத் தொடர்புமே இல்லை அவன் வில்லங்கமாக அதற்குள் இழுக்கப்பட்டுவிட்டான்.



இது ஆரணிக்கும் தெரியும்.

ஆனால் எமது சமூகம் ஒருதரம் ஒருவனை கெட்டவன் என்று முத்திரை குத்திவிட்டால் அவன் எவ்வளவுதான் மாறினாலும் அவனை நல்லவனாக ஏற்றுக்கொள்ள மாட்டாது.

இது ஆனந்திக்கு சவாலாக இருந்தது. இதனால் ஆனந்திக்கு சமூகத்தின் மீது தாங்க முடியாத கோபம். இந்தக் கொபத்தினால் அவள் எல்லாரையும் எடுத்தெறிந்து பேசத் தொடங்கிவிட்டாள். ஆனந்தியின் இந்த நடைமுறைக்கான காரணத்தைக் கூட தாஸின் மீது போட்டு சந்தோசப்பட்டது சமூகம்.

"அவனோடு சேர்ந்த உடனே அவளும் அவனைப்போல மாறிவிட்டாள்" என்பதுதான் சமூகத்தின் பார்வையாக இருந்தது.

ஆனந்தி எதையும் பொருட்படுத்தவில்லை.

ஆனந்திக்கு அவன் மீது ஒரு பரிதாபம். ஒரு மதிப்பு. ஒரு கவனம் மட்டும் தான் இன்று வரை உண்டு. அதேபோல்தான்தான் அவனுக்கும்.

ஆனால் இந்தச் சமூகம் அவர்கள் இருவரும் காதலிப்பதாகவும் சமூகத்தில் அவர்கள் செய்யக் கூடாத தவறைச் செய்து விட்டதாகவும் கதைக்கத் தொடங்கிவிட்டது.

இதன் அவசரமான பிரதிபலிப்புத்தான் ஆரணியின் அப்பாவை சிறீலங்காவிலிருந்து வருவித்துள்ளது.

தான் எடுக்கின்ற ஒவ்வொரு அடியும் சரியாக எடுக்கவேண்டு மென்று ஆரணி தீர்மானித்துக் கொண்டாள்.

ஆரணியைப் பொறுத்தவரை தாஸின் தொடர்பு இதுரை காதலாகவில்லை. அது காதலாகலாம் அல்லது இல்லாமலும் போகலாம். தாஸைப் பொறுத்தவரை தன் வாழ்வில் சில நல்ல மாற்றங்களை உருவாக்கியவள் என்ற நிலையில் மதிப்பிருந்தது.

வீட்டின் அறையில் அமைதியாக இருந்து யோசித்துக் கொண்டிருந்தான் தாஸ்.

ஆரணியின் தொலைபேசி அழைப்பு வந்தது.

அப்பா வந்திருக்கிறார் என்று ஆனந்தி அவனுக்குக் கூறினாள்.

தாஸ் சிறிது நேரம் எதுவும் கதைக்கவில்லை.

"ஆரணி நீங்கள் ஏன் அப்பாவோடை தனியக் கதைக்கக் கூடாது."

"எதைப்பற்றிக் கதைக்கிறது. அப்பாவோடை கதைச்சால் அப்பா நாங்கள்ளிருவரும் காதலிக்கிறமா என்று கேட்பார். என்ன சொல்லிறது?" இப்படி ஆனந்தி கூறியதும் மறு பக்கத்திலிருந்து எந்தவிதமான சத்தமும் இல்லை.

"என்ன தாஸ் நான் என்ன சொல்லிறது."

"உண்மையிலை நாங்கள் காதலிக்கிறமா என்ற எனக்குத் தெரியேல்லை." என்றான் தாஸ்.

"சரி தாஸ் இப்ப இந்த ஆராய்சியை விடுவம். நான் ஒரு மாதிரிச் சமாளிக்கிறன்." என்று சொல்லிவிட்டு ஆரணி தொலைபேசியை வைத்துவிட்டான்.

தாஸின் மனம் அமைதி இல்லாமல் தவித்தது.

தாஸின் அறைக்கதவைத் திறந்து கொண்டு தாஸின் அப்பா வந்தார்.

"தாஸ் நான் உன்னோடை கொஞ்சம் கதைக்க வேணும்." என்றார்.

"சொல்லுங்கோ அப்பா" என்று தாஸ் சொல்ல கட்டிலின் ஒரு மூலையில் அமர்ந்த அவர் தாஸின் முதுகில் தட்டி

"தம்பி நீ ஆரணியைக் காதலிக்கிறியே" என்று கேட்டார்.

தாஸ் எதுவும் கூறாமல் அவரையே பார்த்துக் கொண்டிருந்தான்.

(இன்னும் வரும்..)

# நட்சத்திரத் துணை

அகாலத்தில் தொடங்கியதென் பயணம்
பயணப் பைக்குள் ஞாபகச் சுமைகள்
மவுனத்தில் மனைவி உறைய
மகனுக்கோ இறுக்க முகம்
மகள் விழிகளில் சோகநீரின் பளபளப்பு
வாலாட்டும் வளர்ப்புகளின் கேவல்களை
உதறி
வாகனமேற
இயலுமோ துயில...
துணைக்கு வரும் நட்சத்திரங்களுடனான
உரையாடலோடு
அகாலத்தில் தொடங்கியதென் பயணம்.



# வேறுள குழுவையெல்லாம்

சா. கந்தசாமி

இந்திய நாடாளுமன்ற பொதுத் தேர்தல் நடைபெற இருக்கிறது. கட்சிகள் ஆர்ப்பரித்து எழுந்துவிட்டன. பத்திரிகைகளும் ஊடகங்களும் தேர்தலை கொண்டாட்டம் என்றும் திருவிழா என்றும் செய்திகள் வெளியிடுகின்றன. வறுமை, கல்வி இன்மை, பெரும் மக்கள் தொகை, போக்குவரத்து வசதி இல்லாமை, பணத் தேவை கொண்ட மக்கள் வாழும் நாட்டில் தேர்தல் திருவிழாவாவது தவிர்க்க முடியாததுதான்.

நாடாளுமன்றம் 545 உறுப்பினர்கள் கொண்டது. 81 கோடி இந்திய வாக்காளர்கள் 543 நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கப் போகிறார்கள். அதில் இரண்டு உறுப்பினர்கள் ஆங்கிலோ இந்திய குடும்பங்களில் இருந்து ஜனாதிபதியால் நியமிக்கப்பட இருக்கிறார்கள். அவர்களுக்கு மசோதாக்கள் மீது வாக்களிக்கும் உரிமையில்லை. நாடாளுமன்ற மக்களவைக்குத் தேர்தலுக்க நிற்க சில தகுதிகள் வேண்டும். முதல் தகுதி இந்திய குடிமக்களாகவோ குடியுரிமை பெற்றவர்களாகவோ இருக்க வேண்டும். இருபத்தைந்து வயது பூர்த்தியாகி இருக்க வேண்டும். புத்திசுவாதினமாக



இருக்க வேண்டும். குற்ற வழக்குகளில் சிறை தண்டனை பெற்றிருக்கக் கூடாது. வழக்கு இருக்கலாம். தீர்ப்பு அளிக்கப்படாத வரையில் குற்றவாளி அல்ல. கல்வி தகுதி பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை. எனவே எழுதவும் படிக்கவும் தெரிந்து இருக்க வேண்டும் என்பது அவசியமில்லை.

இந்தியாவில் நூற்றுக்கணக்கான மொழிகள் பேசப்பட்டு வந்தாலும் இந்திதான் ஆட்சி மொழி. ஆங்கிலம் இணைப்பு மொழியாக இருக்கிறது. அதனால் நாடாளுமன்றத்தில் ஓர் உறுப்பினர் இந்தி அல்லது ஆங்கிலத்தில் கேள்வி கேட்கலாம்; பேசலாம். இரண்டு மொழிக்கும் மொழிபெயர்ப்பு இருக்கிறது. அதற்கென இருக்கும் கருவியைக் காதில் மாட்டிக்கொண்டு தேவையான மொழியில் கேட்கலாம். கேட்காமலும் இருக்கலாம். அதுபோல நாடாளுமன்ற மக்களவை உறுப்பினர் பேச வேண்டும் என்பதோ, கேள்வி கேட்க வேண்டும் என்பதோ கட்டாயமில்லை. நாடாளுமன்றம் நடைபெறும் ஐந்தாண்டு காலத்தில் ஒரு முறைகூட பேசாத உறுப்பினரும், ஒரு கேள்விகூட கேட்காத உறுப்பினர்களும் இருந்திருக்கிறார்கள்; இருக்கிறார்கள்.

நாடாளுமன்ற மக்களவைத் தேர்தலுக்கு ஒரு குடிமகன் எத்தனை முறை வேண்டுமானாலும் நிற்கலாம். தேர்ந்தெடுக்கப்பட்டு உறுப்பினராகலாம். அதனை யாரும் தடுக்க முடியாது. மக்களுக்குச் சேவை செய்ய, அர்ப்பணிப்பு உணர்வு, மக்கள் நல்வாழ்க்கை மீது அக்கறையும் கொண்டவர்கள் அம்மாதிரியான லட்சியங்கள் கொண்ட கட்சிகளில் சேர்ந்து உழைக்கிறார்கள். வேறு சிலர் எளிய சாதாரணமான தொண்டனாக ஒரு கட்சியில் சேர்ந்து, கட்சிப் பணியாற்றி தலைவர்களின் பார்வையில் பட்டு தேர்தலில் நிற்க வாய்ப்பு பெறுகிறார்கள்.

சில நேரங்களில் உயர்பதவி வகித்து ஓய்வு பெற்ற அதிகாரிகள், பதவியை ராஜிநாமா செய்த அதிகாரிகள், சினிமா, விளையாட்டு, சமூக சேவை போன்ற துறைகளில் பிரபலமாக இருந்தவர்கள் திடீரென்று ஒரு கட்சிக்குள் புகுந்து கொள்கிறார்கள். அவர்களை கட்சி தலைமை மரியாதையுடன் வரவேற்று தேர்தலில் நிற்க வைக்கிறது. அவர்களின் வெற்றிக்கு தொண்டர்கள் அயராது பாடுபட வேண்டுமென கட்டளை இடுகிறது. ஏனெனில் தங்கள் கட்சியில் பெரிய அதிகாரிகள், நல்ல நிர்வாகிகள், அறிவாளிகள், கல்வியாளர்கள், நிபுணர்கள் இருக்கிறார்கள் என்பதை உலகுக்கு காட்டிக் கொள்ள ஆசைப்படுகிறது.

இந்திய அரசியலில் ஆரம்ப காலத்தில் இருந்தே வழக்குரைஞர்தான் முன்னே இருந்து வருகிறார்கள். காரணம் நிறைய பணம் ஈட்ட முடிகிறது என்பது ஒன்று. இரண்டாவது, சட்டம் என்ன சொல்கிறது என்பதும், சட்டத்திற்கு எதிராக என்ன நடக்கிறது என்பதும் பற்றித் தெரிந்து கொள்ள அதிகமான வாய்ப்புகள் உள்ளன என்பது.

சுதந்திர போராட்டக் காலத்தில் சித்தரஞ்சன்தாஸ், மோதிலால் நேரு, மகாத்மா காந்தி, முகமது அலி ஜின்னா, ராஜாஜி, ஜவாஹர்லால் நேரு, வல்லபபாய் படேல் இவர்களெல்லாம் வழக்குரைஞர் வேலை பார்த்துவிட்டு அரசியலுக்கு வந்தவர்கள். கட்சிக்காரர்கள் படும் கஷ்டங்களே அரசாங்கத்தின் மக்கள் விரோத நடவடிக்கைகளே பலரை அரசுக்கு எதிராக செயல்பட வைத்தது. அது தொடர்ந்து வருகிறது. அதாவது சுதந்திர நாட்டில் அதிகமான வழக்குரைஞர்கள் அரசியலில் ஈடுபட்டு தேர்தலில் நின்று வெற்றியடைந்து அதிகாரத்தை கைப்பற்ற முற்படுகிறார்கள். அவர்களைத் தொடர்ந்து டாக்டர்கள், என்ஜினியர்கள், பெண்கள், கணக்காயர்கள், பத்திரிகையாளர்கள், நடிகர்கள், ராணுவ, சிவில் அதிகாரிகள் என்று பலரும் மக்கள் சேவை செய்ய தேர்தல் களத்தில் இறங்குகிறார்கள். ஏனெனில் எல்லா அதிகாரமும் அரசாங்கத்திடம் இருக்கிறது. சட்டம் இயற்றும் நாடாளுமன்றத்தில் தங்கள் பங்களிப்பு இருக்க வேண்டும் என்று கருதுகிறார்கள். சட்டம் சொல்வதை விளக்கி காரியங்கள் செய்து கொள்வதைவிட, தங்கள் காரியங்கள் சார்ந்து சட்டம் இயற்றிவிடுவது எளிதாக இருக்கும் என்று நம்புகிறார்கள்.

இந்தியாவில் கௌரவமான உயர்ந்த பதவியாக இருப்பது நாடாளுமன்ற உறுப்பினர் என்பதுதான். எனவே அதனை பெறுவது என்பது பலருக்கும் வாழ்க்கை லட்சியமாக இருக்கிறது. அது மக்கள் வாக்குரிமையால் வாக்கால் பெறப்படுவது என்பதால் அதற்கான நேர்மையான மற்றும் நேர்மையற்ற வழிமுறைகளில் ஈடுபடுகிறார்கள். தேர்தல் ஆணையம் எத்தனை கட்டுப்பாடுகள் விதித்தாலும் சாமர்த்தியமாக தாண்டிப் போய் விடுகிறார்கள்.

ஒருமுறை நாடாளுமன்ற உறுப்பினராகி விட்டவர் தொடர்ந்து இருக்கவே ஆசை கொள்கிறார். அதற்கான தகுதி, திறமை தனக்கு இருப்பதாக நம்புகிறார். அனுபவமே அறிவென சொல்கிறார். நட்பு வட்டத்தை, அரசியல், அதிகாரிகள் தொடர்புகளை முன்னே வைக்கிறார். அதோடு திருப்தி அடையாமல் மகன், மகள், மருமகள், பேரர்கள் என்று தன் குடும்பத்தை ஆளும் வர்க்கமாக்க விருப்பங்கொண்டு பணியாற்றுகிறார்கள்.


இந்தியா சுதந்திரம் பெற்ற பின்னர் நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்பதையே தொழிலாகக் கொண்ட பல குடும்பங்கள் தோன்றியிருக்கின்றன. "எங்கள் தொழில் மக்கள் சேவை' என்று மனம் திறந்து சொல்கிறார்கள். பத்திரிகைகள், ஊடகங்கள் அவர்களை பிரபலப்படுத்துகின்றன.

அரசியல் அதிகாரத்தை கைப்பற்ற எல்லாம் செய்யலாம். எதுவும் தவறு கிடையாது. வெற்றி என்பது எல்லாவிதமான தவறுகளையும் நியாயப்படுத்திவிடும் என்கிறார்கள். வழக்குத் தொடர்ந்தால் அவர்களின் பதவி காலம் முடிவதற்குள் நீதிமன்றங்கள் தீர்ப்பு வழங்காது. அதனால் கவலைப்பட தேவையில்லை என்கிறார்கள். அதனால் கிரிமினல் குற்றவாளிகளில் சிலரும் நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருக்கிறார்கள். எல்லா கட்சிகளும் வழக்கு நிலுவையில் உள்ளவர்களுக்குத் தேர்தலில் நிற்க டிக்கெட் கொடுத்து இருக்கிறது. அதற்கு கட்சிகள் சொல்லும் ஒரே காரணம் "நீதிமன்றம் தீர்ப்பு சொல்லவில்லையே' என்பதுதான். நீதிமன்றமோ "வழக்கு முடிவில்லாமல் நீண்ட நாள்கள் நடக்க நாங்கள் காரணமில்லை' என்று கூறுகிறது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் மக்களிடம் இருந்துதான் வருகிறார்கள். அவர்களின் தரம் என்பது மக்களின் தரந்தான். அதாவது குடும்பத்தில், சமூகத்தில் எப்படி நடந்து கொண்டார்களோ, கட்சியில் சேர்ந்து என்னென்ன கற்றுக் கொண்டார்களோ அவற்றின் வெளிப்பாடாகவே நாடாளுமன்றத்தில் செயல்படுகிறார்கள். பல நூற்றாண்டுகளில் உருவான குடும்பம்தான் சமூகத்திற்கு ஆதாரமாக இருக்கிறது. குடும்பம் என்பது சட்ட விதிகளால் கட்டமைக்கப்பட்டதில்லை. எழுதப்படாத விதிகளால் இறுக்கமாகக் கட்டப்பட்டிருக்கிறது. அதனை அறிவதும் அறிந்து செயல்படுவதும்தான் குடும்பம் என்பதற்கு தனி அந்தஸ்தைக் கொடுக்கிறது.

நாடாளுமன்றம் புனிதமான இடம்; மக்கள் நலம் சார்ந்து சட்டம் இயற்றுமிடம். எனவே ஒவ்வொரு உறுப்பினரும் உண்மையான அக்கறையுடன் சுத்தமான மனத்தோடு செயல்பட வேண்டும் என்று கருதி அவர்களுக்கு பல சலுகைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஒரு ஏழை நாட்டில், வறுமை கோட்டிற்குக் கீழே அதாவது பசித்த வயிற்றோடு கோடிக் கணக்கானவர்கள் தூங்க முடியாமல் தவிக்கும் நாட்டில், அவர்கள் கேண்டீனில் ஒரு ரூபாய்க்கு தேநீர் குடிக்கிறார்கள். இருபத்துநான்கு ரூபாய்க்கு கோழி கறி சோறு சாப்பிடுகிறார்கள். அதுபற்றி மக்கள் குறை சொல்லவில்லை. ஆனால் லஞ்ச ஊழல் செய்வதில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சேர்ந்து கொள்வது பற்றி வருத்தப்படுகிறார்கள்.

காலம் காலமாக இந்திய மக்கள் அமைதியாக ஜனநாயக முறையில் வாக்களித்து வருகிறார்கள். தேர்தல் முறை மீதும், உறுப்பினர்கள் மீதும், கட்சிகள் மீதும் மக்கள் எவ்வளவுதான் குறைகள் சொன்னாலும், மக்களே அவற்றை தொடர்ந்து வென்றெடுத்தும் வருகிறார்கள். ■




அன்பர் ஒருவர் குற்றாலம் என்ற இடம்பற்றி மற்றவர்கள் மூலமாகக் கேள்விப்பட்டார். அந்த இடத்தின் சிறப்பை அங்கு போய்வந்த அவரின் நண்பர்கள் கூறினார்கள். அவருக்கும் அந்த இடத்தைத் தான் பார்க்கவேண்டும் என்ற எண்ணம் வந்தது. அங்கு போனார். அங்கேயுள்ள அருவியிலே குளிக்கவேண்டும் என்று அதுபற்றிக் கேள்விப்பட்டதனால் அவருக்கு வெகு நாளாகவே ஒரு ஆசை. அதை நிறைவேற்றத்தான் அங்கே சென்றார். ஆனால், அவர் போனபொழுது குற்றாலத்தில் மிகவும் குளிராக இருந்தது. அவர் குளிர் தாங்கமாட்டார். குளிக்க என்ன செய்யலாம் என்று யோசித்தார். குளிர் தாங்குவதற்கு ஒரு கம்பளியாலே போர்த்திக்கொண்டு போய்க் குளித்தார்.

இது ஒருவர் நகைச்சுவைக்காக எனக்குச் சொன்ன கதை. அண்மையில் இரண்டு கோயில்களிலே பார்த்த காட்சி இந்தக் கதையைத்தான் எனக்கு நினைவூட்டியது. அந்த இரு கோயில்களிலும் கொடிமரங்கள் 'பொலிதீன்' ஆல் போர்த்திக்கொண்டிருந்தன. ஒரு கோயிலில் அங்கு இருந்த அறங்காவலர் சபை உறுப்பினர் ஒருவரிடம் இதைப்பற்றி விசாரித்தேன். அவர் சொன்ன பதில், 'தூசி பிடிக்காமல் இருப்பதற்காக அப்படி மூடி வைத்திருக்கிறோம். திருவிழா தொடங்கும்போது கழற்றிவிடுவோம்' என்பது. மற்றைய கோயிலில் இருந்தவர், 'நான் சொல்லிப் பார்த்துவிட்டேன். யாரும் கேட்பதாக இல்லை. நான் இப்போ ஆட்சிக்குழுவில் இல்லை' என்று சொன்னார். இதுபற்றி ஒரு சிவாசாரியரிடம் பேசியபொழுது அவர் வேறும் சில கோயில்களிலே இப்படி மூடியிருப்பதாகச் சொல்லிச் சிரித்தார்.

வீடுகளிலே இருப்பதற்கு ஆசனங்களை வாங்குவார்கள், துணியால் மூடி வைத்திருப்பார்கள். தொலைக்காட்சி, தொலைப்பேசி கருவிகளை வாங்குவார்கள். பொலிதீனால் மூடிவைப்பார்கள். இவை நாம் பல வீடுகளிலே பார்க்கும் அன்றாடக் காட்சிகள். ஒருவர் சுமார் 50000 பவுன் செலவுசெய்து தன் சமையலறையைச் சீர்செய்தார். ஆனால் அவர் வீட்டுக்கு நண்பர் விருந்துண்ணப் போனபோது, வீட்டுக்காரரின் மனைவி கார் நிறுத்தும் கொட்டகையிலே சமையல் செய்துகொண்டிருந்தார். நண்பருக்கு ஒரே ஆச்சரியம். ஏதாவது குடும்பச் சண்டையா என்று பயந்துவிட்டார். பயந்தபடியே என்ன இது என்று அவர் விசாரித்தபோது, 'குசினி பழுதாகிவிடும்' என்று அவர் நண்பரிடமிருந்து பதில் வந்தது. இதைவிட ஒருபடி மேலே நடந்தது, நேரிலே கண்ட உண்மைச் சம்பவம் ஒன்று. ஒருவர் கார் வாங்கினார். மிகவும் விலை உயர்ந்த கார். ஒருநாள் அவர் வெளியிலே போகவேண்டும். நல்ல மழை பெய்துகொண்டிருந்தது. அவருக்கோ அவசரம் போகவேண்டும். காரை வெளியே எடுக்க மனமில்லை. குடையை

எடுத்துக்கொண்டு நடையைக் கட்டினார் அவர். மழையிலே நனைந்தால் விலையான கார் பழுதாகிவிடுமே என்ற கவலை அவருக்கு. பணத்தைக் கடின உழைப்பு மூலம் தேடிச் சேமித்தவர்களுக்குத்தான் அதன் அருமை தெரியும் என்று இவர்கள் அனைவரும் சொல்லக்கூடும்.

நாம் தொழிற்கல்வி கற்பது வேலை பார்ப்பதற்கு. வேலை பார்ப்பது பொருள் தேடுவதற்கு. பொருள் தேடுவது வசதியாக வாழ்வதற்கு. ஆனால் வசதி வந்தபின்னும் தம்மதை; தாமே கட்டுப்படுத்தி, தேடிய செல்வத்தை அநுபவிக்காது மேலே சொன்னதுபோல இருப்பவர்களை என்ன சொல்ல முடியும்? திருவள்ளுவர் சொல்கிறார்,

> **வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி**
> **தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது**
>
> *அதிகாரம் 38 குறள் 7*

இனி, கோயிலுக்குத் திரும்புவோம். கோயிலில் உள்ள மூர்த்தங்கள் வழிபாட்டுக்கு உரியவை. கோயில் வழிபாட்டுக்கு என்று ஒரு முறை இருக்கிறது. கோபுரம் தூரத்தே தெரியும் என்பதால் முதலிலே கோபுரத்தை வழிபடவேண்டும். பின் கோயிலை அண்மித்ததும் துவாரபாலகரை வணங்கவேண்டும். பின் உள்ளே சென்று வழிபடவேண்டியவைகளிலே நந்தி, பலிபீடம் ஆகியவற்றோடு கொடிமரமும் ஒன்று. அதை மூடிவைத்தால் வழிபடலாமா? வழிபடமுடியுமா? திரை போட்டால் நாம் சந்நிதியை எப்படி வழிபட முடியாதோ அதுபோல மூடிவைத்துள்ள கொடிமரத்தையும் வழிபட முடியாது. கொடிமரம் திருவிழாக் காலத்துக்கு மட்டும் பயன்படுவது என்ற ஒரு தப்பான கருத்து இருப்பதே இப்படி மூடவைக்கிறது. தூசி பிடித்தால் அதைத் துடைக்க முடியாதா? கர்ப்பூரம் காட்டுவதால் புகை, ஓமாக்கினி வளர்ப்பதால் புகை என்று இப்போது ஒவ்வொன்றாகக் கிரியைகளைக் குறைத்து வருகிறோம். கிரியை முறைகளைவிட கோயில் கட்டட அழகும், தூசு படியாமையும் நமக்கு முக்கியமாகிவிட்டது. சமையற்கட்டைத் திருத்திவிட்டு கார் நிறுத்தும் இடத்திலே சமைப்பவருக்கும் கோயிலிலே தீபம் ஏற்றுவதைத் தவிர்ப்பவருக்கும் என்ன வித்தியாசம்? சற்றே சிந்திப்போமா?

■

# ஓர் அறிவிப்பு

அடுத்த இதழில் இருந்து "கேளுங்கள் சொல்கிறோம்" என்னும் புதிய பகுதி தொடங்க விருக்கிறது. வாசகர்கள் தாங்கள் கேட்க நினைக்கின்ற கேள்விகளை, தங்களுடைய சந்தேகங்களை எங்களுக்கு எழுதி அனுப்பலாம். உங்களின் கேள்விகள், சைவம், மருத்துவம், சட்டம், கல்வி, அழகுக்கலை, உளவியல் என எந்தத் துறை தொடர்பாகவும் இருக்கலாம். அந்தந்தத் துறையைச் சேர்ந்த வல்லுனர்களிடம் உங்களின் சந்தேகங்களுக்குரிய விடைகளையும், விளக்கங்களையும் தமிழர் தகவல் பெற்றுத்தரும். உடனடியாகக் கேள்விகளை, மின்அஞ்சல் மூலமாகவே, அஞ்சல் அட்டைகள் மூலமாகவோ கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதி அனுப்புங்கள்.

முகவரி :
41, HADDINGTON ROAD
BROMLEY, KENT BR1 5RG, U.K.
Email : jothy5@yahoo.co.uk

# மூதுரை



## உண்மையான உறவினர்

இல்லாள் அகத்திருக்க இல்லாத தொன்றில்லை
இல்லாளும் இல்லாளே யாமாயின் - இல்லாள்
வலிகிடந்த மாற்றம் உரைக்குமேல் அவ்வில்
புலிகிடந்த தூறாய் விடும்.

நல்ல மனைவி வீட்டில் அமைந்தால், ஒருவனுக்கு இல்லையென்று சொல்லத்தக்க ஒரு பொருளும் கிடையாது. மனைவியானவள் கடுமை பொருந்திய பேச்சை பேசுவாளானால் அந்த வீடானது புலியானது தங்கியுள்ள புதராக ஆகும்.

(கருத்து - நல்ல குணமுடைய மனைவியுள்ள வீடு எல்லாச் சிறப்பும் உடையதாக இருக்கும். கொடிய மனைவியுள்ள வீடு புலியின் புதரைப் போல எல்லாருக்கும் பயத்தைக் கொடுக்குமாம்)



சிவயோகம்
SIVAYOGAM
(Charity Reg No: 1050398 Since: 1995)
To facilitate here and beyond

## அருள்மிகு இலண்டன் முத்துமாரி அம்மன் திருக்கோயில்

2A Elmwood Road, Croydon CR0 2SG. Tel: 020 8767 9881

# சித்திரா பௌர்ணமி மகோற்சவம் 2014

அன்புடையீர்!

வணக்கம். இலண்டன் முத்துமாரி அம்மன் திருக்கோயில் Croydonஇல் தற்காலிகமாக இயங்கி வருவது தாங்கள் அறிந்ததே. ஆலயம் நிலையாக அமையவேண்டும் என்ற நோக்கோடு பொருத்தமான காணி கொள்வனவு செய்யும் எமது முயற்சிகள் இன்னும் கைகூடவில்லை. அம்மன் அருளால் நாம் செய்யும் முயற்சிகள் விரைவில் கைகூடப் பிரார்த்திக்கிறோம்.

இந்த ஆண்டுக்கான வருடாந்த உற்சவம் மார்ச் 30-ம் நாள் பிள்ளையார் திருவிழாவுடன் ஆரம்பமாக உள்ளது. தற்போது கொடியேற்றி உற்சவம் காணும் சூழ்நிலை இல்லை. எனவே தினமும் காலை எழுந்தருளி அம்பாளுக்கும் மாலை மூலஸ்தான அம்பாளுக்கும் இரு வேளையும் பிள்ளையார் முருகனுக்கும் விசேடமான அபிஷேகங்களை தொடர்ந்து சிறப்பு அலங்காரங்களுடன் வாகனத்தில் அமர்த்தி பூஜைகள் நடைபெறும்.

### 30.03.2014 ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் 19.04.2014 சனிக்கிழமை வரை தினமும்

| | | |
|---|---|---|
| **காலை** | **10.00** | **பிள்ளையார், முருகன், எழுந்தருளி அம்மன் அபிஷேகம்** |
| | **12.00** | **சிறப்புப் பூசை** |
| **மாலை** | **05.30** | **பிள்ளையார், முருகன், மூல அம்மன் அபிஷேகம்** |
| | **07.30** | **சிறப்புப் பூசை** |

பக்தப் பெருமக்கள் அனைவரும் இத்திருவிழாக் காலங்களில் வருகை தந்து எல்லாம் வல்ல இலண்டன் முத்துமாரி அம்மனின் பேரருளைப் பெற்றுய்யுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.


நன்றி


அன்புடன்

**அறங்காவலர் சபையினர்**

Design & Printed by: RS Printers Ltd. 020 8762 3844 / 077 8522 4837



பரபரப்பான
விற்பனையில்...
நீண்ட இடைவெளிக்குப்பிறகு
தமிழர் தகவல்
பொங்கல் சிறப்பிதழ்
வெளிவந்துவிட்டது.
தமிழர்
திருநாள்
வாழ்த்துக்கள்
பல சுவையான
36 சிறுகதைகள்
கட்டுரைகளுடன்
5 பவுண்ட் மட்டுமே!


22ct GOLD
இலண்டனில் தரமான தங்கத்திற்கு
PATHMINI
JEWELLERS
892 London Road
Thornton Heath
Surrey CR7 7PB
Tel : 020 8665 1111
Fax : 020 8664 8999


அழைப்பிதழ்கள்
நூல்கள், இதழ்கள்
அழகிய வடிவில்
சிறந்தமுறையில் அச்சிட
தங்களின் அனைத்துவகையான
அச்சுத் தேவைகளுக்கும்
தமிழர் தகவலை
தொடர்புக்கொள்ளுங்கள்
2086981583


எவரஸ்ட்
24 Loampit Hill
Lewisham SE13 7SW
Tel : 020 8691 2233
அசத்தலான
அசைவ சுவைக்கு
Breakfast Lunch Dinner


Anthoorium
Jewellery & Textiles
World of Designs
102, B Burlington Road
New Malden, Surrey KT3 4NT
Tel : 020 8942 8001 Fax : 020 8942 8007
Web : www.anthoorium.co.uk Email : sales@anthoorium.co.uk


The No.1 Brand
in the
market...
And
more importantly
in your hearts
BRAND
Niru
QUALITY•TASTE•VALUE
நிரு தரம், நிரந்தரம்!!




லூசியத்தில் முதலாவது
தமிழ்க்கடை

# கற்பகம்

தங்கள் சேவையை
விரிவாக்கியுள்ளார்கள்

**KATPAGAM**

**36, Loampit Hill Lewisham**
**London SE 13 7SW**
**Tel : 694 88 10**

உடன் காய்கறிகள்
பழவகைகள், இறைச்சி,
தமிழ் ஆடியோ, வீடியோ
தமிழ்படங்கள் அனைத்தும்
ஒரே இடத்தில்




ஆடை ஆபரணம் வாங்க ஆசை பூர்த்தியாக
நீங்கள் என்றும் நாடவேண்டிய ஒரே இடம்

# Jk Gold House & Fashion House


314 - 316 London Road
Croydon, Surrey CRO 2TJ
Tel : 020 8684 4577
Fax : 022 8684 4677




AYNGARAN
AYNGARAN INTERNATIONAL
PROUDLY PRESENTS
ESCAPE ARTISTS
P.MADAN PRESENTS
A.R.MURUGADOSS PRODUCTIONS
FOR FURTHER DETAILS
020 8540 1500, 020 8903 3300
020 8543 4342, 020 8543 4477
Maan Karate
DIRECTION : THIRUKUMARAN MUSIC : ANIRUDH
STARRING: SIVAKARTHIKEYAN, HANSIKA MOTWANI, SATHISH, SOORI, VAMSI KRISHNA
FROM FRI 4TH APRIL - CINEWORLD CINEMAS
ILFORD, FELTHAM, WANDSWORTH, WEMBLEY, STAPLES CORNER
BIRMINGHAM BS, MILTON KEYNES, SHEFFIELD, STOCKPORT
LIVERPOOL, CRAWLEY, CARDIFF
ADVANCE BOOKING : http://www.cineworld.co.uk OR CALL - 0871 220 1000
CHILDREN WILL BE ALLOWED
FROM FRI 4TH APRIL - HARROW SAFARI
DAILY SHOWS FROM FRI 4TH APRIL TO 17TH APRIL
(2.00PM SAT / SUN) - 5.00PM- 8.00PM - (11.00PM FRI / SAT)
ADVANCE BOOKING: http://www.safaricinema.com OR CALL - 020 8426 0303 / 0606
JOIN US ON
YouTube www.youtube.com/ayngaran
www.facebook.com/ayngaran
visit us: www.ayngaran.com


Best Food
364 - 366, Bath Road
Hounslow Middlesex TW4 7HT
Tel : 020 8577 6002
Fax : 020 8570 2323
எங்கள் வியாபார நிலையத்தில் ஒவ்வொருமாதமும்
அதிரடி மலிவு விற்பனையாக
பல பொருட்களை மக்களுக்கு விற்பனை செய்கிறோம்.
ஒவ்வொரு மாதமும் எங்கள் கிளைகளுக்குச் சென்று மலிவு விலை
பொருட்களை பெற்றுக்கொண்டு கணிசமான பணத்தை
சேமியுங்கள்


88 years of silk heritage
RmKV
Wedding Silks
Bridal Seven
panagal park | chennai
brooke bond rd | coimbatore
vannarpettai | tirunelveli
toll free no 1800 425 3105
(applicable within India only from 10am to 9pm)
sms Bridal7 to 53636
email silks@rmkv.com
www.facebook.com/RmkvSilks
purchase online at www.rmkv.com
Now in
Bangaluru
Orion Mall
brigade gateway campus
Dr. Rajkumar rd
malleswaran-rajaji nagar
bengaluru




Accomodates up to 650 with complete onsite parking facility for more than 150 cars

G&G Event Specialists Ltd. Snakey Lane, Feltham, Hounslow, TW13 7NA. 07788560001. www.nakshatrahall.com

# Lycamobile

Call the world for less

# Sri Lanka




## Text "ACT SAVE" to 2525

**For your FREE Lycamobile SIM visit www.lycamobile.co.uk or call 020 7132 0322**

Top-up your SIM online or where you see the following signs:

TESCO Martin McColl Sainsbury's WHSmith Carphone Warehouse

Offer valid for new and existing Lycamobile customers. The above special rates are applicable for those customers who joined on or after 08.02.2014. Existing customers who joined before 08.02.2014 should opt-in by texting ACT SAVE to 2525. If you are a National plan ( UK PLAN 10,12,20,30 & 40) customer you will eligible for the Special discounted international rate. Existing customers who joined before 08.02.2014 who do not opt-in will be charged at the standard rate. Promotion valid from 08.02.2014.

Lyca mobile

Call the world for less